பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 22 செவ்வாய்க்கிழமை (07.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 251

# மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு
# ஐ.நா. கண்காணிப்புக் குழு நிறுவுங்கள்!

## மனித உரிமை அவதானிப்பு மையம் அறிக்கை

நியூயோர்க், ஓகஸ்ட் 7

நியூயோர்க்கை மையமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் அவதானிப்பு மையம் (Human Rights Watch) இலங்கை அரசையும், கருணா குழுவையும் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றன எனத் தெரிவித்து, கடுமையாகச் சாடும் அறிக்கையை நேற்று வெளியிட்டது.

இலங்கையில் இந்த இரு தரப்பினரும், புலிகளும் மேற்கொள்ளக்கூடிய மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களைக் கண்காணித்து, விசாரித்து அறிக்கையிடும் தகுதி கொண்ட ஆணையோடு ஐ.நா. கண்காணிப்பு அமையம் ஒன்று நிறுவப்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ள அந்த அமைப்பு, அதற்கு சம்பந்தப்பட்ட அரசுகளும் இலங்கை அரசும் ஒத்துழைத்து ஊக்குவிக்க வேண்டும் என்றும் கோரியிருக்கின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை முன்னரங்கில் நேற்றுமாலை குண்டு வீச்சு

கிளிநொச்சி,ஒக.7

முகமாலைமுன்னரங்க நிலைகளுக்கு அப்பால் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

குடாநாட்டின் வான்பரப்புக்கு மேலாகச் சென்ற 'கிபிர்' விமானங்கள் முகமாலைப் பகுதியில் தாக்குதல் நடத்தின.

ஆனால் சேத விவரம் குறித்து தகவல் கிடைக்கவில்லை. (அ-1-5)

## ஐ.நா. அதிகாரி ஹோம்ஸ் இன்று அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

### யாழ்.படை அலுவலகத்தில் நடைபெற ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக.7

ஐ.நாவின் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகால நிவாரணப் பணி இணைப்பாளர் பொறுப்புகளை வகிக்கும் கீழ் நிலைச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்.

இவரின் யாழ்.வருகைக்கான ஏற்பாடுகளை 'யுனிசெவ்' நிறுவனத்தின் யாழ். அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இன்று காலை விமானம் மூலம் யாழ். வரும் ஐ.நா. அதிகாரி 512ஆவது யாழ்.நகர பிரிகேட் அலுவலகத்தில் யாழ். அரச அதிபர், அரச அதிகாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின்

(02ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அணியின் ஆயுதங்களைக் களைவது தற்போதைக்கு சாத்தியமல்ல என்கிறது அரசு

### அவற்றை வழங்கியது அரசு அல்ல என்கிறார் கெஹலிய

கொழும்பு,ஒக.7

''கருணா அணியினரின் ஆயுதங்களைக் களையச் செய்வது தற்போதைக்கு - உடனடியாக - சாத்தியப்படாது. அரசு யாருக்கெல்லாம் தான் ஆயுதங்களை வழங்கியதோ அவர்களை மாத்திரமே உடனடியாக ஆயுதங்களைக் களையச் செய்ய முடியும். அந்தவகையில் கருணா அணியினருக்கு அரசு ஆயுதங்களை வழங்கவில்லை. இருந்தாலும் அவர்கள் ஆயுதங்களை களைந்து முற்றாக ஜனநாயகத்தில் இணைவது அவசியம்.''

- இவ்வாறு அரசின் பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் (08ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மனிதநேய சட்டங்களுக்கு அமைவாக தொண்டு பணியாளர்கள் கொலையை விசாரிக்குக!

### ஐ.நா.பிரதிநிதி அரசிடம் கோரிக்கை

கொழும்பு,ஒக.7

மூதூரில் செயற்பாட்டுவந்த பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேரின் படுகொலைகள் குறித்து இலங்கை அரசு நீதித்துறையின் முழுப் பலத்தையும் வேகத்தையும் பயன்படுத்தி புலன் விசாரணைகளை நடத்த வேண்டும்''

- இவ்வாறு ஐ.நாவின் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகால நிவாரணப் பணி இணைப்பாளர் பொறுப்புகளை வகிக்கும் கீழ்நிலைச் செயலாளர் ஜோன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையிலிருந்து பலாலி நோக்கிச் சென்ற வாகனத் தொடர் அணி மீது கிளைமோர் தாக்குதல்

### 5 படையினர் காயம் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.7

பருத்தித்துறையில் இருந்து பலாலி நோக்கி, பிரதான வீதி ஊடாகச் சென்ற வாகனத் தொடரணியை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

பருத்தித்துறை வேலாயுதம் ம.விக்கு சமீபமாக நேற்று நண்பகல் 12.10 க்கு இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் சிக்கிய பஸ் தூக்கி வீசப்பட்டது; எரிந்து சேதத்துக்குள்ளானது.

இதில் பயணஞ்செய்த ஐந்து சிப்பாய்கள் காயமடைந்தனர். அவர்கள் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டுச் செல்லப்பட்டனர் என படைத் தரப்பு அறிவித்துள்ளது. இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவரும் காயமடைந்ததாக படைத்தரப்பு மேலும் தெரிவித்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக 'ராடர்'களை இந்தியா இலங்கைக்கு அனுப்பி உதவியது

புதுடில்லி,ஒக.7

ஓராண்டு இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்கு மேலதிகமாக 'ராடர்'களை இந்தியா அனுப்பி உதவியிருப்பதாக 'த ஹிண்டு' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

புலிகளின் வான் தாக்குதல்களின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து ஓராண்டுக்குப் பின்னர் மேலதிகமான ராடர்களை இலங்கைக்கு இந்தியா அனுப்பியுள்ளதாக புதுடில்லியில் உள்ள இந்தியப் பாதுகாப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'ராடர்'களை மீளப்பெறக் கோருகிறார் வைகோ

சென்னை,ஒக.7

இலங்கைக்கு வழங்கியுள்ள ராடர்களை இந்தியா மீளப்பெற வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நேற்று அனுப்பிய கடிதத்திலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு ஆயுத உதவிகள் வழங்குவதை உடன் நிறுத்தவேண்டும் என்று

(08ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் தாக்குதல்களால் உடல் உபாதைக்குள்ளாகியுள்ளோம்

### நீதிமன்றில் இந்திய மீனவர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,ஒக.7

கச்சதீவு கடற்பகுதியில் கடந்த வருடம் ஜனவரி மாதம் வெடிபொருள்களுடன் கைதான ஐந்து தமிழக மீனவர்களும் கடற்படையினரால் தாம் தாக்கப்பட்டதில் உடல் நலம் பாதிப்புக்குப் பெரிதும் ஆளாகியிருப்பதாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தனர்.

இலங்கைக்கு 'டெற்றனேற்றர்களை' கடத்தியதாக கச்சதீவுக் கடலில் வைத்து கைதான இவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

பாதுகாப்புக் காரணமாக இவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர். பின்னர் அவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தடுத்து

(02ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டி படுகொலை வழக்கு; அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

### சாட்சிகளுடன் சட்டத்தரணி தொடர்புகொள்ள வசதியாக

யாழ்ப்பாணம்,ஒக.7

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் கடந்த வருடம் மே மாதம் 13ஆம் திகதி பதின்மூன்று பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நாளைமறுதினம் காரைநகர் கடற்படை முகாமில் இடம்பெறவிருந்த அடையாள அணிவகுப்பு பிற்போடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் நேற்று இடம் பெற்றது.

அப்போது நீதிமன்றில் ஆஜரான குற்றப்புலனாய்வுப் பிரிவு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மகேஸ் பெரேரா நீதிமன்றில் மூன்று அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

சம்பவம் நடந்த தினத்தன்று கஞ்சதேவ கடற்படை முகாமில் இருந்தவர்கள் தொடர்பாகவும் -

அன்று மாலை 6 மணிக்குப் பின்னர் கடமைக்கு வெளியே சென்றவர்களின் விவரங்கள் தொடர்பாகவும் -

அன்று மாலை 6 மணிக்கு சொந்த வேலையாக வெளியே சென்றவர்களின்

(02ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் சோதனை நிலையம் நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்

வவுனியா படை முகாமில் இருந்து புளியங்குளம் சோதனை நிலையம் நோக்கி நேற்று மாலை 5.30 மணி முதல் 6 மணிவரை பல்குழல் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சோதனை நிலையம் ஊடாக பயணிகள் பயணித்துக்கொண்டிருந்த போது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடினர். சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

அதேவேளை, சேமமடு, பன்றிக்கெய்தகுளம் ஆகிய பகுதிகளை நோக்கியும் நேற்று பல்குழல் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கால்நடைகளின் விவரம் பதிவு

குடாநாட்டின் பண்ணைகளிலுள்ள கால் நடைகளின் பதிவுகள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிவு நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள பண்ணையாளர்கள் தமது கால் நடைகளை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தத்தம் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு திணைக்களத்தின் வட பிராந்திய உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (202)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் பொருளியற்றுறை சிரேஸ்ட விரிவுரையாளரும், தற்போதைய அரசறிவியற்றுறை சிரேஸ்ட விரிவுரையாளருமான **எஸ். சகாயசீலன்** அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு, ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் பல்கலைக்கழகச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தலைவர் மற்றும் விரிவுரையாளர்கள், பொருளியற்றுறை.*

(63395) யாழ். பல்கலைக்கழகம்.

## கண்ணீர் வணக்கம்



அமரர்

**சகாதேவன் நிலக்ஷன்**

(ஊடகத்துறை மாணவன் யாழ். பல்கலைக்கழகம், முன்னாள் தலைவர், யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம்)

அவர்களின் திடீர் மறைவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், எமது கண்ணீர் வணக்கத்தையும் செலுத்துகின்றோம்.

- வடமராட்சி மாணவர் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் கி. வினோதானந்தன் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி கிறிஸ்ஸோலோகஸ் பொன்மலர்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.* (63410)

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

அமரர் **தம்பு இராமலிங்கம்** (செல்லையா)

(இளைப்பாறிய அதிபர்)

மண்ணில்: 13. 08 .1913 — விண்ணில்: 08 . 07 . 2007

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்தியமும் இன்று (07.08.2007) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இ. கலாதேவன், பெரியமாவடி, சாவகச்சேரி.* (சி-53174) **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 14 ★ 12 ★ 1918



உதிர்வு: 20 ★ 07 ★ 2006

அமரர் **குட்டித்தம்பி அன்னபூரணம்**


(திதி: ஆடி அபரபட்சத் தசமி 07.08.2007)

ஆண்டு ஒன்றென்ன
அறுபது ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயர்.

*"உதயகிரி", நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (63403)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கி முகாமையாளர்

C. **நியூட்டன் ஜெனநாதன்**

அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி கிறிஸ்ஸோலோகஸ் பொன்மலர்**

அவர்களின்னாா பிரிவால்

துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திருக்கிறோம்.

**ஊழியர் நலன்புரிக் கழகம், தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி.**

(63412)

# ஐ.நா. அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மனித நேயப் பணிகள், நிவாரணப் பணிகள் தொடர்பாக அவர் விரிவாக கேட்டறிவார் என்று அவற்றுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்பின்னர் ஐ.நா. அதிகாரி அன்று மாலையே விமானம் மூலம் கொழும்பு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(அ-50)

# அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்கள் தொடர்பாகவும் - தனித்தனி அறிக்கைகளை அவர் சமர்ப்பித்தார்.

நாளைமறுதினம் வியாழக்கிழமை காரைநகர் கடற்படை முகாமில் அடையாள அணிவகுப்பு நடத்தத் தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளதாக அவர் நீதிவானிடம் தெரிவித்தார்.

அப்போது பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைக் கவனிக்கும் சட்டத்தரணி எம்.றெமீடியஸ் -

இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது தங்கியுள்ளனர். அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சி எடுத்துள்ளேன். ஆகவே அதற்கு இருவாரங்கள் அவகாசம் வழங்கவேண்டும் - என்று கேட்டுக்கொண்டார்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்து அன்றைய தினம் அணிவகுப்புக்கான திகதியை நிர்ணயிக்கலாம் எனத் தெரிவித்தார். (அ-1)

# கடற்படையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்தனர்.

சம்பந்தப்பட்ட மீனவர்களிடம் மீட்கப்பட்ட வெடிபொருள் சம்பந்தமான இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு குற்றப்புலனாய்வுத் துறையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் ஐவரும் நேற்று நீதிவான் ஜெயராமன் றொக்ஸி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தங்களுக்கு எதிராக வழக்கு எதுவும் தொரப்படாத நிலையில் ஒன்றரை வருடத்துக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் முறையிட்டனர்.

கைது செய்யப்பட்ட வேளையில் தாங்கள் கடுமையான தாக்குதலுக்கு இலக்கானதில் உடல் உபாதைகளுக்கு உள்ளாகியிருப்பதாக அவர்கள நீதிவானிடம் தெரிவித்தனர்.

நீதிவான் அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தார்.

தனது வயிற்றில் உதைந்து தாக்கியதில் இயற்கைக் கடன் கழிப்பதில் சிக்கலை எதிர்நோக்குவதாகவும் ஒருவரும், தன்னால் எழுந்திருக்க முடியவில்லை மற்றொருவரும், தலைச்சுற்று, மார்புநோவுக்கு ஆயாகியிருப்பதாக மூன்றாவது மீனவரும் தமது வாக்குமூலங்களில் தெரிவித்தனர்.

அவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் அவர்களுக்கு தேவையான வைத்திய உதவிகளை வழங்க ஏற்பாடு செய்யும்படியும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இவர்கள் தொடர்பாக இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்குமாறும் நீதிவான் பதிவாளரைப் பணித்தார். (அ-1)


## ஐடியல் அக்கடமி

நீராவியடி, யாழ்ப்பாணம்.

**O/L Paper Class - 2007**

| | |
|---|---|
| கணிதம் V.N. பத்மநாதன் | விஞ்ஞானம் A. தபேசன் |
| தமிழ் P. தமிழ்மாறன் | ஆங்கிலம் P. மதன் |

சமூகக்கல்வியும் வரலாறும் K. சுதன்

ஆரம்பம்: 08.08.2007 புதன் 6 a.m.

குறிப்பு: * தனிப்பாட அனுமதியுண்டு
* மாணவர்களின் வசதிக்கு ஏற்ப நேர அட்டவணை.



## பதவி வெற்றிடம்

காப்புறுதியின் முன்னோடியும் யாழ். மண்ணில் 40 வருடங்களுக்குமேலாக தொடர்ந்து நிலைத்து நின்று வரையறையற்ற காப்பீட்டினை இன்றும் வழங்கி வருவதுமான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது யாழ்ப்பாணம், நெல்லியடி கிளைகளுக்கு பிரதேச ரீதியாக காப்புறுதி ஆலோசகரை நியமிக்க உள்ளது.

தகைமை : G.C.E. O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

தகைமையும் விருப்பும் உள்ளவர்கள் உரிய கிளையில் நேர் முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.

*08.08.2007*
*மு.ப. 9 - 11*
*பிரதான வீதி,*
*மக்கள் வங்கி முன்பாக,*
*நெல்லியடி,*
T.P. No. 021 226 4686,
Mobile No. 0777 563781. (63409)

*09.08.2007*
*மு.ப. 9.00 - 11.00*
*வீரசிங்கம் மண்டபம்,*
*யாழ்ப்பாணம்.*
T.P. No. 021 222 2023,
Mobile No. 0773863753.


## மரண அறிவித்தல்கள்



### திருமதி கிறிஸ்ஸோலோகஸ் பொன்மலர்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, உதவி அதிபர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ஸோலோகஸ் பொன்மலர் நேற்று (06.08.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ஸோலோகஸின் அன்பு மனைவியும் விநோதானந்தன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), மனோகரன், ஜெனநாதன் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி), நவீனராஜன், ஜஸ்மின் ஆகியோரின் அன்புத் தாயும் அன்னராணி, அருந்தவராணி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மனோநிதி (நவீல்ட் பாடசாலை), ராஜன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆளீன் ஷிறாந்தி, அலோய் நிரேஷ், றுக்ஷன், ஏஞ்சல், குளோரியா, மேசி, றொஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (07.08.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*58, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.* (63407)

தகவல்: குடும்பத்தினர்.

### சின்னர் செல்லத்துரை

இடைப்பிட்டி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் செல்லத்துரை 05.08.2007 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - பொன்னுப்பிள்ளை தம்பதியாரின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி (லண்டன்), தேவராசா (லண்டன்), சண்முகராசா (லண்டன்), பரமேஸ்வரி (கொழும்பு), ஜெயராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம் (கொழும்பு), இராமநாதன், மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் காரைநகர் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பீடும் என்பதையும் அறியத்தருகிறோம்.

*இடைப்பிட்டி, காரைநகர்.* (63408)

தகவல்: *ஆ. நடராசா (பெறாமகன்).*



### கனகரட்ணம் புவனேந்திரராஜா

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் புவனேந்திரராஜா (06.08.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் றஞ்சிதமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிமுத்து - விசாலாட்சி தம் பதியரின் அன்பு மருமகனும் நவரத்தினராசா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கவிதா (லண்டன்), நிஷாந்தினி, கஜேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜசுரேஸ், விக்னேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் அகிலாவின் (லண்டன்) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2007) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.* (63405)

தகவல்: குடும்பத்தினர்.

### சின்னையா செல்லத்துரை

(சீற்றாசாரியார், முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத் தாபனம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அரியாலையைத் தற்காலிக வதி விடமாகவும் கொண்ட சின்னையா செல்லத்துரை நேற்று (06.08.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் விநாயகதாஸ் (இ.போ.ச. ஊழியர், வவுனியா), கமலாதேவி, செந்தில்நாதன், சக்திவேல்பிள்ளை, குணதாசன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரரும் த.பஞ்சலிங்கம் (உ.க. பணிப்பாளர், மு.ப.க. அபிவிருத்திப் பிரிவு, வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி, வசந்தாதேவி, யமுனாராணி, பத்மாவதி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராமசாமி, கந்தையா, மாசிலாமணி மற்றும் கதிரவேலு ஆகி யோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.08.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/2, கலைமகள் வீதி, அரியாலை.*
தொ.பே. 021 222 6524

தகவல்:
செ.விநாயகதாஸ், செ.செந்தில்நாதன் (மகன்மார்).
ப.கமலாதேவி (மகள்).
த.பஞ்சலிங்கம் (மருமகன்).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச அபிவிருத்தித் திட்டங்களுக்கு வரவு செலவு நிதியிலிருந்து ரூபா 9 லட்சம் ஒதுக்கீடு!

நல்லூர், ஓக.7

வேலணை பிரதேச செயலர் பிரிவில் பிரதேச அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கென வரவு செலவு நிதியில் இருந்து 9 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரமாண அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தில் இந்நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளனர்

இந்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஸ்ரீகாந்தா நயினாதீவு மாகாவித்தியாலயத்திற்கு தளபாடங்கள், கணனி, விளையாட்டு உபகரணங்களுக்கென 2லட்சம் ரூபாவும், நயினாதீவு வைத்தியசாலை கட்டட புனரமைப்பு, தளபாடங்களுக்கு என ஒரு லட்சம் ரூபாவும், புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்கான படுக்கைகள், தளபாடங்கள், வைத்திய உபகரணங்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வேலணை சரஸ்வதி வித்தியாலய தளபாடங்கள், கற்பித்தலுக்கான உபகரணங்களுக்கு 50 ஆயிரமும் வேலணை மத்திய மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூடம், விளையாட்டு உபகரணங்கள், நூலக தளபாடங்கள் கொள்வனவுக்கு ஒரு லட்சமும் வேலணை செட்டியபுலம் தமிழ் கலவன் பாடசாலைக்கு தளபாடங்கள், கற்பித்தல் சாதனங்கள், விளையாட்டு உபகரணங்களுக்கு என 50ஆயிரமும் வேலணை ஸ்ரீ கணேசா தமிழ் கலவன் பாடசாலைக்கு தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், கற்பித்தல் உபகரணங்களுக்கென 50 ஆயிரமும் ஒதுக்கியுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை மின் இணைப்புக்கான புனரமைப்புக்கென ஒரு லட்சமும் திருமதி பத்மினி சிதம்பரநாதன் புங்குடுதீவு பெருங்காடு பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நீர்விநியோகச் சேவைக்கென 45 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

(203-111)

## முட்பற்றைகள் நிறைந்த சுழிபுரம் மயானம்

சுழிபுரம் ,ஓக. 7

சுழிபுரம் பகுதியிலுள்ள மயானம் முட்பற்றைகள் நிறைந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது. இதனால் தகனக் கிரியைகளுக்காகச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சுழிபுரம் மழுவைப் பகுதியிலுள்ள கேணியடிக்கு அருகாமையிலேயே பிரதேச மக்கள் தகனக் கிரிகைகளை நடத்தி வருகின்றனர். இப்பிரதேசம் முட்பற்றைகள் நிறைந்ததாகவும் உடைந்த பீங்கான் பாத்திரங்கள் போன்ற கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டும் காணப்படுகின்றன. இதனால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இந்த மயானத்தைப் பராமரிப்பதற்கென குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(202-28)

## வடமராட்சி வலய மாணவருக்கு அரங்க நிகழ்வுப் போட்டிகள்

வடமராட்சி,ஓக. 7

வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களிடையே கோட்டமட்டத்தில் சிறுவர் அரங்கு நிகழ்வுப் போட்டிகள் செப்ரெம்பர் 15ஆம் திகதியும் வலயமட்டப் போட்டிகள் 22ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள் அடுத்தமாதம் 7ஆம் திக திக்கு முன்னர் விண்ணப்பங்களை கோட் டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-160)

## வீதி சேதம்

சுழிபுரம் ,ஓக.7

பண்ணாகம், ஆலடி வைரவப் பெருமாள் ஆலய பின்பக்கமாக உள்ள வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாது சேதமடைந்து காணப்படுகின்றது.

பனிப்புலம் செல்லும் இவ்வீதி மழை காலத்தில் பிரயாணம் செய்ய முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளது. இவ்வீதியை முன்னுரிமை அடிப்படையில் திருத்தம் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-28)


## மகுடம் சஞ்சிகை வெளியீடு

நவாலி, ஓக.7

நவாலி, வை.எம்.சி.ஏயினரால் 'மகுடம்' என்னும் சஞ்சிகை மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகின்றது.

அரையாண்டைப் பூர்த்தி செய்யும் இச் சஞ்சிகையில் போட்டிகள், பொதுஅறிவு வினாக்கள், விஞ்ஞான விளக்கங்கள், வைத்தியக் குறிப்புகள் போன்றவை உட்படப் பல ஆக்கங்கள் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-100)

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பெருந்திருவிழா 18இல் ஆரம்பம்



நல்லூர் கந்தசாமி ஆலய பெருந்திரு விழா எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழா தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

திருவிழாநாள்களில் நடைபெறும் விசேட திருவிழாக்களின் விவரம் வருமாறு:

27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை மஞ்சத்திருவிழாவும் அடுத்தமாதம் 03 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை கார்த்திகைத் திருவிழாவும் 06ஆம் திகதி வியாழக்கிழமை காலை சந்தான கோபாலர் திருவிழாவும் மாலை கைலாச வாகனமும் இடம்பெறும்.

07ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கஜவல்லி மகாவல்லி திருவிழாவும் மாலை வேல்விமானமும் 08ஆம் திகதி சனிக் கிழமை காலை தெண்டாயுதபாணி திரு விழாவும் மாலை ஒருமுகத்திருவிழாவும் இடம் பெறும்.

9ஆம் திகதி ஞாயிற் றுக் கிழமை சப்பரத் திரு விழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேர்த் திருவிழாவும் 11ஆம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

12ஆம் திகதி புதன்கிழமை மாலை பூங்காவனமும் , 13ஆம் திகதி மாலை வைரவர் சாந்தியும் இடம்பெறும்.

ஊரடங்கு நேரத்தை அனுசரித்து பூசைகள் யாவும் நேரகாலத்துடன் நிறைவடையும் என்று அறியப்படுகிறது. (203-111)

## கல்வி அமைச்சின் கீழுள்ள சகல பிரிவுகளையும் உள்ளடக்கி ஒருங்கிணைந்த சேவை உருவாக்கம்

அச்சுவேலி, ஓக.7

கல்வி அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கல்வி நிர்வாகசேவை, இலங்கை கல்வியாளர் சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதியசேவை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய ஒருங்கிணைந்த சேவையை உருவாக்குவது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், உயர் அதிகாரிகள், தொழிற் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலில் புதிய சேவையை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பொது நிர்வாக அமைச்சின் தாபனப் பணிப்பாளர் கருணரத்தினா தலைமையில் ஐந்து பேர் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள சேவைகளில் பணியாற்றுபவர்களின் சம்பள முரண்பாடுகள், சம்பள அதிகரிப்புக்களை உரிய முறையில் மேற்கொள்வதற்கு தற்போது உள்ள சேவைகளை உள்ளடக்கி புதிய சேவை ஒன்றை உருவாக்குமாறு தேசிய சம்பள நிர்ணய பதவி ஆளணி ஆணைக் குழு வழங்கிய ஆலோசனையின் பேரிலேயே இந்தப் புதிய ஒருங்கிணைந்த சேவை உருவாக்கப்படவுள்ளது.

(202-11)



வலிகாமம் மேற்குப் பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கிடையிலான கோலம் போடும் திறன்காண்போட்டி அண்மையில் நடைபெற்றது. போட்டியில் சிறுவர்கள் கோலம் போடுவதையும் நடுவர்கள் மதிப்பீடு செய்வதையும் படத்தில் காணலாம். (படம்: சுழிபுரம் செய்தியாளர்)




## சங்கானையில் படையினரால் தொழிலாளர் விவரம் சேகரிப்பு

சங்கானை, ஓக.7

சங்கானைப் பிரதேசத்தில் உள்ள வியாபாரநிலைய உரிமையாளர்கள், விற்பனையாளர்கள், மரக்கறி வியாபாரிகள் போன்றோரது பெயர் விவரம் அடங்கிய பட்டியல்களில் அவர்களது படங்களையும் ஒட்டி சங்கானைப் பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்குமாறு படையினர் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து 300 இற்கும் மேற்பட்டவர்கள் இப்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒட்டோ சாரதிகள், அங்காடி வியாபாரிகள், லான்ட்மாஸ்ரர் சாரதிகள் ஆகியோரும் இவ்வாறு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-29)

# குடாநாட்டு சிறார்களின் போசாக்குக் குறைபாட்டை நீக்க சமூக சேவைகள் அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம் ,ஓக. 7

குடாநாட்டு சிறார்களிடையே போஷாக்குக் குறைபாடு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இந்த நிலைமையை நீக்குவதற்கான ஏற்பாடுகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றார்.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டில் போசாக்கின்மை காணப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் நீரிழிவு போன்ற நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக சிறுவர்களிடையே காணப்படும் போஷாக்கின்மையானது எதிர்காலத்தில் பாரியதொரு பின்னடைவை ஏற்படுத்தக்கூடியது.

இவ்விடயங்கள் தொடர்பாக அமைச்சரிடம் பலர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

குடாநாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்ற உணவுப் பொருள்கள் பாரியளவில் பழுதடைந்து போவதாகவும் அதே நேரம் பொதுமக்கள் அதிகம் உபயோகிக்காத உணவுப் பொருள்கள் பெருமளவில் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலைமையில் மாற்றங்களைக் கொண்டுவர அமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

அமைச்சர் சென்ற தடவை யாழ்.நகருக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த சமயம் போஷாக்கு உணவுப் பொருள்கள், மருத்துவப் பொருள்கள், குத்தரிசி, நாட்டரிசி உடல் வலுவூட்டும் பொருள்களை உடனடியாகக் குடாநாட்டுக்குக் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மூக்குக் கண்ணாடிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் கண் பார்வையில் பாதிப்பு ஏற்பட்ட 75 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இம் முகாமில் 300 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். கண் பரிசோதனை மேற்கொண்டவர்களில் பார்வையில் குறைபாடு உள்ளவர்களுக்கே மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## பரிகார கற்பித்தல் தொடர்பான செயலமர்வு

வடமராட்சி ,ஓக. 7

வடமாகாணப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பரிகாரக் கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கோடு வலய ரீதியாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் வடமராட்சி வலய ஆசிரியர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் பயிற்சிச் செயலமர்வுகள் எதிர்வரும்21ஆம் திகதிமுதல் 28ஆம் திகதிவரை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இதில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கு பற்றவுள்ளனர். (203-160)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.7

தெல்லிப்பழை மத்தியஸ்தர்கள் சபையின் மத்தியஸ்தர்கள்தினவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம மத்தியஸ்தர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முதளிதரன் கலந்து கொள்வார். (203)

* * *

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மருதனார் மடம் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

பிரதேசசபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கலந்து கொள்வார். (203)

## சரசாலை வடக்கில் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தினர் கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற இரு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

சங்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் சங்க எல்லைக்குள் வசிக்கும் இரு பிள்ளைகளுக்கே இப்புலமைப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.தனேஸ்வரன் ஆகியோர் புலமைப்பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (202-207)

## அறநெறி மாணவருக்கு சமய அறிவுப் போட்டி

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சமய அறிவுப் போட்டி ஒன்றை அடுத்த மாதம் முதலாம் திகதி நடத்தவுள்ளது. இப்போட்டிக்கென மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் அந்தந்தப் பாடசாலைகளின் ஊடாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.செயலகத்தில் உள்ள இந்து கலாசார திணைக்களத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-79)

## கண்ணீர் அஞ்சலி

*யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்*

### சந்தாம்பிள்ளை சகாயசீலன்

காலமாகியதையிட்டு யாழ்ப்பாணப்பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு, அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது. அவரது பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் மற்றும் உறவினர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.** (63393)

## மரண அறிவித்தல்கள்

### *சண்முகம் செல்லத்துரை*

(உரிமையாளர், ஈஸ்வரன் மோட்டேர்ஸ் - கோண்டாவில்)

கோண்டாவில், உப்புமடத்து பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் செல்லத்துரை நேற்று (06.08.2007) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சாரதாமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராஜதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினம்மா (ஆஸ்திரேலியா), பத்மநாதன், இராஜேஸ்வரி (பிரான்ஸ்), தர்மராஜா (மெக்கானிக்), பகவதிப்பிள்ளை, சிறிதரன் (ஜேர்மனி), சாந்தரஞ்சினி (உப தபால் அதிபர்), ஈஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் சிவகுமார் (சுவிஸ்), குலதேவி (ஆஸ்திரேலியா), சுமந்திரன் (பிரான்ஸ்), சுகந்தினி (லண்டன்), சுவர்ணா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் குணசிங்கம் (ஆஸ்திரேலியா), சுரேஸ்குமாரி (பிரான்ஸ்), நந்தகுமார் (லண்டன்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவில், டச்சுவீதியில் உள்ள சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
*சாரதாமணி (மனைவி),*
*தர்மராஜா (மைத்துனர்).*

டச்சுவீதி,
உடுவில். (63379)

### நன்னியன் கந்தையா



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியன் கந்தையா நேற்று (06.08.2007) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னியன்- செல்லி தம்பதியரின் அன்பு மகனும் சிவக்கொழுந்து, பூரணம், ரத்தினம் ஆகியோரின் சகோதரனும் கனகம்மாவின் அன்பு கணவரும் திலகராஜா (சவுதி),ஸ்ரீபவானந்தராசா (ஜேர்மனி), லிங்கேஸ்வரி (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (கனடா), ஜெயபவானி, ஜெயமதி, நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தி (ஜேர்மனி), தர்மலிங்கம் (ஜேர்மனி), விஜி (கனடா), ரவீந்திரராசா, நீதிராசா, சந்திரன், இராசமலர் ஆகியோரின் அன்பு மாமனும் மயூரன், ஆதித்தியன், ஆரதியா, சஸ்மிகா, பகீரதன், நிவானா, சகானா, கென்ராஜ், கென்சிகா, சயந்தன், ஜெனீஸ்ரன், டில்சான், பிறின்சிகா, பிருந்திகா, பிருன்ராஜ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் கரச்சி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினரும்
மருமக்களும்.

*பாரதி வீதி,*
*சங்கானை.* (63398)

## வலி.கிழக்கு பிரதேசத்தில் 85 கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக.7

வலிகாமம் கிழக்கு பிரதேசத்திலுள்ள 85 பொதுக் கிணறுகள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் திருத்தப்பட்டு வருகின்றன.

இந்த வேலைகளுக்கான செலவாக 67 இலட்சத்து 13 ஆயிரத்து 463 ரூபா மதிப்பிடப் பட்டுள்ளது.

திருத்தப்படவுள்ள கிணறுகளின் விவ ரம் வருமாறு ஊரெழு - 5கிணறுகள், நீர்வேலி வடக்கு -03 கிணறுகள், உரும்பிராய் மேற்கு - 3 கிணறுகள், கோப்பாய் மத்தி, கோப்பாய் வட மத்தி - 15 கிணறுகள், புத்தூர் கிழக்கு - 19கிணறுகள், ஆவரங்கால் கிழக்கு -13 கிணறுகள், கதிரிப்பாய்- 19 கிணறுகள், அச்சுவேலி மேற்கு - 4 கிணறுகள், இருபாலை கிழக்கு - 4 கிணறுகள். (202-160)

## பல்கலை. மாணவருக்கு சிறுகதைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக.7

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழக மாணவர்களிடையே சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மாணவர்களிடையே எழுத்தாற்றலை வளர்க்கும் முகமாக நடத்தப்படவுள்ள இப்போட்டியில் சகல விடயங்களும் பிரதிபலிக்கும் வகையில் சிறுகதைகள் அமைய வேண்டும். போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் சிறுகதைகளை எழுதி பெயர் விவரங்களுடன் யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்திடம் ஒப்படைக்குமாறும் தரமான கதைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. (203-79)

## சான்றிதழ் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக.7

பலாலி ஆசிரியர் கலாசாலையில் 2001ஆம் ஆண்டுக்கு முன் இறுதிப் பரீட்சையில் தோற்றி இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள் விடுமுறை காலத்தில் புதன்கிழமைகளில் கலாசாலை அலுவலகத்தில் சான்றிதழ்களைப் பெறலாம் என கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (202)

## கண்ணீர் அஞ்சலி

*யாழ் .பல்கலைக்கழக அரசறிவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர்*

### எஸ்.சகாயசீலன்

*அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலை கொள்வதுடன், அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**புவியியற்றுறையினர்.**

*யாழ்.பல்கலைக்கழகம்.* (63387)


## தவறிவிட்டது

தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த விசுவநாதன் பகீரதன் என்பவருடைய விசேட அடையாள அட்டை, A.T.M. காட், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**(Phone Shop Nelliyady)**
(நெல்லியடி பஸ்தரிப்பிடத்திற்கு முன்வாசல்)
**T.P.No. 021 2263770** (63394)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 34 வயது, குற்றமற்ற, உத்தராடம் மகரராசியையுடைய கனடாவிலிருக்கும் பொறியியலாளருக்கு அழகான 30 வயதிற்குட்பட்ட பட்டதாரி மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். திருவோணம், அவிட்டம், ரேவதி பொருத்தமானது.

*தொடர்பு:* **த.கணபதிப்பிள்ளை,**
சாயி இல்லம், இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (63397)


## கேள்வி அறிவித்தல்

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இ.தராட் தரம் | கேள்வி பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/VTC/01 | தொழிற்பயிற்சி நிலையம், நிர்மாணித்தல், சுன்னாகம். | M6/C7 | 72,000.00 | 1,000.00 |
| 02. | JF/BD/GA/DS/01 | மாநாட்டு மண்டபம் விரிவாக்கம் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். | M7/C8 | 48,000.00 | 500.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்
   (1) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   (2) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (3) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
   (4) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
   (5) கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர் உள்நாட்டு இறைவரி த்திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம் (தொ. இல.021 - 222 2634) பரிசீலிக்க முடியும்.

04. கேள்வி ஆவணங்களை 08.08.2007 தொடக்கம் 22.08.2007 பிற்பகல் 1 மணிவரையும் மீளளிக்கப்படாத கேள்வி தொகை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறை வேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

05. மூடிய கேள்விகளை ***தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்*** என்னும் முகவரிக்கு 24.08.2007 முற்பகல் 11 மணிக்கு முன்பாக அனுப்பி வைப்பதுடன் உடனடியாக கேள்வி திறக்கப்படும் இந்த நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற் படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

கே.கணேஷ்
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை /**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.** (சி-53172)

## மரண அறிவித்தல்



### மு. நவரத்தினம்

*(இளைப்பாறிய நிலஅளவை உதவி அத்தியட்சகர்)*

தொண்டைமானாறு, கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் வசித்துவந்தவரும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய மு.நவரத்தினம் 05.08.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம்-சௌந்தலை அம்மாள் அவர்களின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அசோகன், சித்திரா, Dr. அமரா, நீத்திரா, மீரா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், திருமதி சந்தனம்பிள்ளை, முருகேசு, கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், இரட்ணசிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகி யோரின் அன்புச் சகோதரரும் Dr.சிறீதேவி (நந்தா), பரமேஸ்வரன், குணசிங்கம், ரகுநாத், சிவபிரான் ஆகியோரின் அன்பு மாமனும் அரவிந, ஆர்த்தி, ஆரதி, அகலி, ஆரணி, சாரங்கன், கிரண், பூமாலஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பிற்பகல் 3 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று,4.30 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
M.N. *அசோகன் (மகன்),*
*கொழும்பு. தொ.பே.: 2595860*

S. *தில்லை நடராஜா.*
*274, அரசடி றோட், கந்தர்மடம்.* (சி/53170)

## நாவற்குழி மறவன்புலோவிலுள்ள யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்குச் சொந்தமான நெற்காணிகளில் விவசாயம் செய்வோருக்கான அறிவித்தல்

தென்மராட்சி நாவற்குழி, மறவன்புலோ கிராமத்திலுள்ள யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்குச் சொந்தமான நெற்காணிகளை குத்தகை பெற்றுள்ளோர் குத்தகையை சபைக்குச் செலுத்துமாறு இத்தால் கேட்டுக் கொள்கிறோம்.

இக்காணிகளைக் குத்தகைக்குப் பெற்றுள்ளோர் சிலர் அக்காணிகளை ஆட்சி உரிமை உறுதிப்பத்திரம் எழுதி வேறு நபர்களுக்கு விற்றுள்ளதாக அறிகின்றோம். இவர்களுக்கு எதிராகவும், குத்தகை செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

*தலைவர்,*
*சைவபரிபாலனசபை, 66, கல்லூரி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* *தொலைபேசி இல. 021 222 7678*


## வீடும் வளவும் விற்பனைக்கு

**சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு சமீபமாக உள்ளது.**

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**
பொ. வேலாயுதம்,
இளைப்பாறிய ஆசிரியர்,
**கோவில் தெரு,**
தும்பளை,
பருத்தித்துறை. (சி-53173)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 23

க.பொ.த[உ/த] மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

## இந்து நாகரிகம்

ஆக்கம்- கல்விச்சுடர் ஆசிரியர் குழு

### இந்துநாகரிகம்-1

பகுதி (அ)

பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1.01 தென்கிழக்காசிய நாடுகளில் அடங்காத தொகுதி
1) ஜாவா, சம்பா, பர்மா, கம்போடியா, தாய்லாந்து.
2) சம்பா, மலேசியா, தாய்லாந்து, பாலித்தீவு, சுமாத்திரா.
3) கம்போடியா, பர்மா, இலங்கை, ஜாவா, சம்பா.
4) சிங்கப்பூர், சம்பா, தாய்லாந்து, கம்போடியா, பர்மா.
5) பாலித்தீவு, மலேசியா, சுமாத்திரா, ஜாவா, சம்பா. ( )

1.02 காஷ்மீர் சைவம் பற்றித் தெளிவாக விளக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்
1) சந்திரகுப்தர். 2) அபிநவகுப்தர். 3) கௌடில்யர்.
4) பசவர். 5) இராமானுஜர். ( )

1.03 ''சங்கட நாஸானம்'' எனும் பகுதி காணப்படும் புராணம்
1) காருட புராணம். 2) நாரதீய புராணம். 3) பாகவத புராணம்.
4) சைவபுராணம். 5) மார்க்கண்டேய புராணம். ( )

1.04 வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ........ எனும் பாடலைப் பாடியவர்
1) ஆறுமுக நாவலர். 2) மகாகவி பாரதியார். 3) மகாத்மா காந்தி.
4) சுவாமி விபுலானந்தர். 5) சுவாமி விவேகானந்தர். ( )

1.05 வேதங்களில் அறக்கடவுள், ரிதஷயகோபா என அழைக்கப்பட்டவன்
1) இந்திரன். 2) சிவன். 3) வருணன்.
4) யமன். 5) மித்திரன். ( )

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.

1.06 சிதம்பரத்திலே கோவிந்தராமச் சந்நிதானத்தை அமைத்த விஜயநகரப் பேரரசன் இராமநாயக்கன். ( )

1.07 இலங்கையில் பெறப்பட்ட தொல்பொருட்களில் மிகத்தொன்மையானவை இந்து சமயத்திற்குரியவை எனக்கூறியவர் பரணவிதானா. ( )

1.08 விமானத்தின் மேற்குக் கோட்டத்தில் தட்சணாமூர்த்தியின் வடிவத்தை ஸ்தாபனம் பண்ணுவது வழக்கம். ( )

1.09 அரசியலை பொருள்முதல்வாத அடிப்படையில் விளக்குவது மனுதர்மசாஸ்திரம். ( )

1.10 கடோபநிடதத்தில் யமனுக்கும் நசிகேதனுக்கும் இடையே நடந்த உரையாடல் ஆன்மா பற்றியது. ( )

பின்வருவனவற்றிற்கு சுருக்கமான விடைதருக.

1.11 ஆதிகாவியம், ஐந்தாம் இலக்கியம் எனப் பெயர்பெறும் பேரிலக்கியங்கள் எவை?
..........

1.12 பட்டடித்தடிகள் பாடிய நூல்களில் இரண்டினைத் தருக.
..........

1.13 திருக்காமக்கோட்டம் என்றால் என்ன?
..........

1.14 இலங்கையில் பொலநறுவைக்காலத்தில் விக்கிரமசாலா மேகபுரத்தில் அமைவு பெற்ற சிவாலயம் எது?
..........

1.15 தர்மசாஸ்திரங்கள் தோற்றம் பெறுவதற்கு அடிப்படையான தர்மசூத்திரங்கள் இரண்டு தருக.
..........

பின்வரும் இடைவெளிகளை பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1.16 நவீனகால இந்துமத சீர்திருத்தங்களில் சுவாமி விவேகானந்தரால் .................. இராஜாராம் மோகன்ராஜினால் .................. தயானந்த சரஸ்வதியினால் ..................என்னும் இலக்கியங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

1.17 நாட்டிய சாஸ்திரம் எனும் நூல் .................. என்பவராலும் சங்கீத ரத்னாகரம் எனும் நூல் .................. என்பவராலும் அருளப்பட்டன.

1.18 மகாபாரதத்தின் 12வது பகுதியாகிய .................. இந்திய அரசியற் கலைபற்றி அறிய உதவும்.

1.19 மாமல்லபுர சிற்பம் சித்தரிக்கும் காட்சி .................. ஆகும்.

1.20 திருக்கோயில் வழிபாட்டின்போது தேவாரம், திருவாசகம் முதலியன ஓதப்படுவது .................. எனப்படும்.

பகுதி (ஆ)

பின்வருவனவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

02. காணபத்தியம் பற்றி கீழ்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
1) தோற்றம், வளர்ச்சி.
2) நூல்கள்.
3) பிரதிமாலட்சணங்கள்.
4) வழிபாட்டு முறைகளும் சைவசமயத் தொடர்பும்.

03. இந்துசமய மறுமலர்ச்சிக்கு ஞானமார்க்கப் பிரதிஷ்டாபகர் ஆற்றிய பணிகளை மதிப்பிடு செய்க.

04. காஷ்மீரசைவம், வீரசைவம், சைவசித்தாந்தம் என்பவற்றிற்கு இடையிலுள்ள தொடர்புகளையும் வேற்றுமைகளையும் சுருக்கமாக விளக்குக.

05. புராதன காலத்து இந்துசமுதாயத்தில் மகாபாரதம் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் விடயங்கள் குறித்து விளக்குக.
1) ஐந்தாம்வேதம் என அழைக்கப்படும் நிலை.
2) அரசியலும் ஒழுக்கமும்.
3) சமயச் செல்வாக்கு.

06. பொலநறுவைக்காலம் முடியும்வரை இலங்கையில் ஏற்பட்ட வைணவசமய வளர்ச்சியை பின்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
1) திருக்கோயில்கள்.
2) திருக்கோயில் கொடைகள்.
3) கலை அம்சங்கள்.
4) சமூகத் தொடர்புகள்.

07. 1) இஸ்லாமியரது ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட வைணவசமய மறுமலர்ச்சிக்கு ஏதுவாய் இருந்த காரணங்கள் யாவை?
2) அம்மறுமலர்ச்சியின் பிரதான பண்புகள் யாவை?

08. தென்னாசிய நாடுகளில் இந்துப்பண்பாடு பரவலடைந்த வரலாற்றை பின்வரும் விடயங்கள் குறித்து விளக்குக.
1) பரவலடைந்ததற்கான காரணங்கள்.
2) ஜாவாவில் இந்துப்பண்பாடு.
3) கம்போடியாவில் இந்துப்பண்பாடு.

09. இலங்கையில் இந்துசமய வளர்ச்சிக்கு சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பணிகளை மதிப்பிடு செய்க.

10. பின்வருவனவற்றில் நாலிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1) நாலாயிரம் திவ்விய பிரபந்தம்.
2) சைவத் திருமுறைகள்.
3) திருவருட்பயன்.
4) வீரசைவம்.
5) திருமந்திரம்.

### இந்துநாகரிகம்-11

பகுதி (அ)

பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1.01 வேதாந்த சூத்திரம் என அழைக்கப்படுவது
1) தர்ம சூத்திரம். 2) பிரம்ம சூத்திரம். 3) வேதாகமங்கள்.
4) சங்கர வேதாந்தம். 5) கிருஹ்ய சூத்திரம். ( )

1.02 ''துரஸ்ருதி'' எனும் நூலிலே ஆன்மாக்கள் பற்றிக் கூறியவர்
1) சங்கரர். 2) இராமானுஜர். 3) மத்துவர்.
4) நாரதர். 5) பாதராயணர். ( )

1.03 இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இடம்பெறும் ஒரு கதாபாத்திரம்
1) இராமன். 2) அனுமன். 3) வீஷ்மர்.
4) தர்மன். 5) வாலி. ( )

1.04 காஞ்சிபுரத்துப் பெரியகற்றளி எனப் போற்றும் கோயில்
1) காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயில். 2) காஞ்சி குமர கோட்டம்.
3) காஞ்சி கைலாசநாதர் கோயில். 4) காஞ்சி காமகோடி பீடம்.
5) காஞ்சி காமாட்சி கோயில். ( )

1.05 ''தேவஞ்ஞான வித்தியா'' எனும் கலைபற்றிக் கூறும் உபநிடதம்
1) முண்டகோ. 2) தைத்திரிய. 3) கௌசிதகீ.
4) பிருகதாருண்யக. 5) சாந்தோக்கிய. ( )

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.

1.06 ஞானமார்க்க பிரதிஷ்டாபகர் என அழைக்கப்பட்டவர் சங்கரர் ஆவார். ( )

1.07 ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனக்கூறும் தமிழ்நூல் திருவாசகம். ( )

1.08 தமிழ் நாட்டில் கோயில் வழிபாடு மரங்களின் கீழே தொடங்கியது எனலாம். ( )

1.09 சைத்தாக்கரி என அழைக்கப்பட்ட மன்னன் மகேந்திரவர்மன் ஆவார். ( )

1.10 உருவ வழிபாட்டிற்கு வேதங்களே மூலம். ( )

பின்வரும் இடைவெளிகளை பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1.11 .................., .................., .................., .................., .................., என்போர் சனகாதி முனிவர் ஆவர்.

1.12 ஜலசயனம் என .................. கோயிலும், பரமேஸ்வர விண்ணகரம் என .................. கோயிலும் அழைக்கப்படுகின்றன.

1.13 குப்தர்கால கல்விக்கூடங்கள் .................., .................. போன்ற இடங்களில் அமைவு பெற்றுள்ளன.

1.14 பௌத்த ஒழுக்கவியலில் .................. சீலம், .................. சீலம், .................. சீலம் என்பவை பிரதானமானவை.

1.15 சிவஞானபோதம் .................. அதிகாரம்.................. சூத்திரம் .................. வெண்பாக்கள் என்பவற்றால் அமைவுபெற்றது.

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1.16 இந்துக்களின் புராதன கல்விமுறை யாது?
..........

1.17 இந்துக்களின் வாஸ்து சாஸ்திரம் பற்றி அறியஉதவும் நூல் எது?
..........

1.18 நடராஜர் வடிவம் உணர்த்தும் தத்துவங்கள் மூன்றும் எவை?
..........

1.19 கதிர்காமத்தில் எக்கோயிலில் இயற்கையாக அமைந்த பிள்ளையார் சிலைகளைக் காணலாம்?
..........

1.20 தென்நாட்டில் சிறந்த வார்ப்பு விக்கிரகங்கள் படைக்கப்பட்ட காலம் எது?
..........

பகுதி (ஆ)

பின்வருவனவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

02. இந்து தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைந்த உபநிடதங்களை பின்வரும் அடிப்படையில் விளக்குக.
1) காலமும் நோக்கமும்.
2) அமைப்புமுறை.
3) பொருள்மரபு.
4) பிற்கால தரிசனங்களுக்கும் உபநிடதங்களுக்கும் இடையிலான தொடர்பு.

03. இந்துக்களின் வாழ்வில் நால்வகை ஆச்சிரமங்கள் செலுத்திய செல்வாக்கினை மதிப்பிடு செய்க.

04. இராமானுஜரது கோட்பாட்டினை பின்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
1) விசிட்டாத்வைதம்.
2) கடவுக்கோட்பாடு.
3) பிரபஞ்சமும் ஆன்மாவும்.
4) அத்வைதத்தில் இருந்து வேறுபடும் விதம்.

05. சைவசித்தாந்தம் கூறும் பசுக்கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
1) பிரமாண நூல்கள்.
2) ஆன்மா பற்றி சைவசித்தாந்தம் தரும் விளக்கம்.
3) ஆன்மாவும் மும்மலங்களும்.
4) வீடுபேறும் இறைவன் துணையும்.

06. பல்லவர்கால கோயில் கட்டடக்கலையின் சிறப்பியல்புகளை பின்வருவனவற்றை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.
1) கோயிற் கட்டடக்கலை வளர்ச்சிக்கு பணியாற்றிய அரசரும் கோயில்களின் வகைகளும்.
2) கோயிற் கட்டட வளர்ச்சியும் பொதுஅம்சங்களும்.

07. நிருத்தியக்கலையின் வளர்ச்சி நிலைகளை கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்குக.
1) நோக்கம்.
2) பொருள்மரபு.
3) இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் நிருத்தியம்.
4) உலகப் பிரசித்திபெற்ற நிலை.

08. புராதன இந்துக்களினது அரசியல்நிலை பற்றி ஒரு கட்டுரை வரைக.

09. 1) சிவபெருமானின் மூர்த்தி பேதங்களில் முக்கியமான சிலவற்றை எழுதுக.
2) அம்மூர்த்தி பேதங்களில் ஒன்றாக விளங்கும் தட்சிணாமூர்த்தி வடிவத்தினை கீழ்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
அ) இலட்சண விதி.
ஆ) அது உணர்த்தும் தத்துவம்.
இ) ஆலயங்களில் தட்சிணாமூர்த்தி வடிவங்கள்.

10. கீழ்வருவனவற்றில் மூன்றைப்பற்றி விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.
1) அர்த்த சாஸ்திரம்.
2) இந்துக்களின் உயர் இலட்சியங்கள்.
3) பௌத்தமும் ஒழுக்கவியலும்.
4) சோழர்கால சிற்பங்கள்.

க.பொ.த[உ/த] மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

## தமிழ்

ஆக்கம்- கல்விச்சுடர் ஆசிரியர் குழு

பகுதி 1

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
1) பேராசிரியர் க.வித்தியானந்தனின் தமிழ்ப்பணிகள்.
2) விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகள்.
3) உலகின் செம்மொழி வரிசையில் தமிழ்மொழி.
4) இன்றைய வாழ்விற் சமயம்.
5) தமிழ்த் திரைப்படங்களின் இன்றையநிலை.
6) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

02. பின்வரும் 'அ' உரைப்பகுதியையும் 'ஆ' செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக.

அ) தமது தேசத்தில் தெய்வபக்தி அதிகம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் தெய்வத்தை நம்பிவிட்டு நாம் யாதொரு முயற்சியும் செய்யாமல் வெறுமே இருந்தால் தெய்வமும் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கும். தெய்வத்தை நம்பி நாமும் முயல வேண்டும். எப்படியென்றால் ஒரு குழந்தை அழாமல் வெறுமே இருந்தால் தாய் அதன்மீது கண்ணைச் செலுத்தாமல் மற்ற வேலைகளில் கவனம் செலுத்துகின்றாள். அழத் தொடங்கினால் ஆத்திரத்துடன் வேலையை விட்டு குழந்தையை எந்தவிதத்திலாயினும் சமாதானப் படுத்த முயல்கின்றோம். அதுபோல நாம் ஒரு காரியத்தில் ஊக்கம் வைத்து பிரயத்தனப் பட்டால் அந்த வேலைக்கு எப்படியாவது ஒரு முடிவைத் தெய்வம் காட்டும். "நான் தூங்குவேன்" என தெய்வத்திடம் சொன்னால் "சுகமாகத்தூங்கு" என்று சொல்லி நம்மைத் தட்டித் தூங்கப்பண்ணுகிறது. "மாட்டோம்" நாங்கள் எழுந்து உலக விடயங்களைக் கவனிக்க வேண்டும் இதோ எழுகிறோம் என்றால் "எழுந்திரு குழந்தாய் உனக்கு இந்தப்பெரிய வழியை ஏற்படுத்தி இருக்கிறேன். அந்தவழியே போய் நன்மை அடை" என்கிறது. தெய்வத்தை நம்பி நாம் முன்னோர் வழியை நாமே தேடவேண்டும். "முயற்சி திருவினையாக்கும்" என்பது முன்னோர் கூறும் மொழி. முயற்சி செய்தால் தெய்வம் நன்மை செய்யும். (பாரதியார் கட்டுரைகள் 335-339)
1) இப்பந்தியில் ஆசிரியர் கூறவந்த முக்கிய கருத்து யாது?
2) அக்கருத்தை ஆசிரியர் எவ்வாறு விளக்கியுள்ளார்?
3) இப்பந்தியை பதினைந்து சொற்களுக்கு மேற்படாமல் சுருக்கி எழுதுக.

ஆ) கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்தொழுகாப் பெண்.
1) மேற்கண்ட செய்யுளிலே ஆசிரியர் பொதிந்து வைத்துள்ள கருத்தை ஏறத்தாழ முப்பது சொற்களில் ஒரு பந்தியாக எழுதுக.
2) இச்செய்யுளில் நீ இனங்காணும் அணிப்பிரயோகங்களை எடுத்துக்காட்டுக.

03. கீழ்வரும் பதினைந்து வினாக்களும் (அ), (ஆ), (இ) என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் இருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாக பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

அ) 1) பின்வரும் சொற்களில் ஒலியளவில் குறைந்தொலிக்கும் நெட்டெழுத்துக்கள் இடம்பெற்ற சொற்கள் எவை?
கௌரி, காரம், சைவம், வாரம்.
2) கழி, களி ஆகிய சொற்களின் பொருள்வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.
3) குருவி + கூடு இச்சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.
4) கசு மெய் நெட்டுயிர்களுடன் சேர்ந்து மொழிமுதல் வருவதற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.
5) பின்வருவனவற்றுள் பகுபதங்களைத் தெரிந்து அவற்றைப் பிரித்துக்காட்டுக. சால்பு, மரம், தெரியாமை, பணம்.

ஆ) 6) காண் என்ற வினையடியில் இருந்து வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் அமைத்துப் பிரித்துக்காட்டுக.
7) ஊருக்குக் கிழக்கே உள்ளது கடல்
ஆசிரியருக்கு உரியது அறிவுடைமை
இவ்விரு வாக்கியங்களில் வரும் "கு" உருபு எவ்வெப் பொருளில் வந்துள்ளது என்பதைக் குறிப்பிடுக.
8) தேய், மறை என்ற வினையடிகள் தன்வினையாகவும் பிறவினையாகவும் வருமாறு வாக்கியங்கள் அமைத்துக்காட்டுக.
9) பின்வருவனவற்றுள் தெரிநிலை வினையையும் குறிப்பு வினையையும் வேறுபடுத்திக் காட்டுக.
கண்டான், நல்லன், நின்றான், கொடியன்.
10) பின்வரும் வாக்கியங்களில் வரும் படித்த என்ற சொல்லின் வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.
அவன் என்னுடன் படித்த மாணவன்.
அவன் மிகவும் படித்த மாணவன்.

இ) 11) "உண்டே கடவுள்" "எல்லோரும் வந்தனர்" இவ்விரு வாக்கியங்களில் வரும் ஏகார இடைச்சொல்லும் உம்மை இடைச்சொல்லும் எவ்வெப் பொருளில் வந்துள்ளன?
12) செஞ்ஞாயிறு, பனித்துளி, துடியிடை, எரிகனை இவை ஒவ்வொன்றும் என்ன தொகை எனக் குறிப்பிடுக.
13) அந்த மரத்திலுள்ள ஒவ்வொரு பறவைகளும் பறந்து சென்றன. இவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
14) ஆனால், ஆகவே, அல்லது ஆகிய இடைச்சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.
இன்று பல்கலைக் கழகம் திறக்கப்பட்டது.
விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை.
15) நாளைக்கு யாராவது வருவார்கள். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள ஆவது என்ற இடைச்சொல் உணர்த்தும் பொருள் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து கெட்ட பூமியாக இன்றைய புங்குடுதீவு; அதனை விட்டுச் செல்லாதோரின் அவலம் நீங்காதா?

சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவுக் கிராமம் பாரம்பரியமிக்க பழைய கிராமம். இக்கிராமத்தில 1981ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின் பிரகாரம் 14,500 மக்கள் வாழ்ந்திருந்தனர். எந்தவிதமான இடையூறுமில்லாதிருந்திருப்பின் இத்தீவில் தற்போது 25,000 மக்கள் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்பிருந்த போதிலும் 1980 களைத் தொடர்ந்து தொடர்ச்சியான மக்கள வெளியகல்வு. 1991ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒட்டு மொத்தமான மக்கள் வெளியேற்றம் காரணமாக அங்கு எஞ்சியிருந்தவர்கள் 850 பேர் மட்டுமேயாகும். 1996ஆம் ஆண்டு மீண்டும் தீவகத்திற்காக தரை வழிப்பாதை திறக்கப்பட்டதையடுத்து வெளி மாவட்டங்களில் தற்காலிகமாக தங்கி வாழ்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் மீளவே தற்போது ஏறத்தாழ 4,500 மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

புங்குடுதீவுக் கிராமத்தின் பொருளாதார அமைப்பானது பெருமளவிற்கு விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும் கணிசமான மக்கள் யாழ்ப்பாணக்குடாநாடு உட்பட வெளிமாவட்டங்களில சேவைத் தொழிலில் ஈடுபட்டு அதன்மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தினை 'மணியோடர' மூலம் சொநதக் கிராமத்திற்கு அனுப்பியதன் வாயிலாகவும் மக்கள் வாழ்வு சிறப்புற்றிருந்தது. ஒரு சிறு தொகுதியினர் மட்டுமே மீன்பிடித் தொழிலிலும் தச்சுத் தொழிலிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

இந்நிலையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வளவாய்ப்புக்களுடன் வாழ்ந்து வந்த மக்களிடையே 1980 களிலிருந்து அசாதாரண சூழ்நிலைகள் தோன்றவே சர்வதேச இடப்பெயர்வு முனைப்புப்பெறத் தொடங்கியது. அதற்கு சுமார் 60 சதவீதமான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு புகலிடம் தேடிச் சென்றுவிட்டனர். கணிசமான வர்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் புங்குடுதீவுக் கிராமம் கடந்த கால நூற்றாண்டுக்கும் மேலாக எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையாயினும் ஏற்கனவே காணப்பட்டிருந்த வசதிவாய்ப்புக்கள், அழிவுற்ற உட்கட்டுமானவசதிகள் யாவும் முடக்கப்பட்ட நிலை காணப்படுவதனால் அங்கு தற்போது வாழ்ந்துவரும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை நாளாந்தம் எதிர்கொண்டு வருவது மட்டுமல்லாது தமது கிராமத்தில் சென்றுவாழ விரும்பும் மக்களின் ஆர்வத்தினைப் பின்னடையச் செய்யும்நிலையையே ஏற்படுத்தியுள்ளது என்பதுதான் இன்றைய உண்மைநிலையாகும்.

### போக்குவரத்துப் பிரச்சினை

இப்பிரதேசத்தில் பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றபோதிலும் மக்களின் அன்றாட வாழ்வுக்குச் சவாலாக அமைந்திருப்பவை போக்குவரத்துப் பிரச்சினை, வைத்திய வசதியின்மை, மின்சார வசதி வழங்கப்படாமை என்பனவேயாகும்.

முதலாவதாக போக்குவரத்து தொடர்பான நிலமைகளை நோக்கும்போது குறிகாட்டுவான் துறையுடன் தொடர்பான போக்குவரத்து ஓரளவுக்கு இயங்கி வருகின்ற போதிலும் தீவின் உட்பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றுமுழுதாக முடக்கப்பட்டுவிட்டது. 1967ஆம் ஆண்டு குறிகாட்டுவான் இறங்குதுறை தயாராகும்வரை நயினாதீவு, அனலைதீவுக்கான பயணமார்க்கம் இறுப்பிட்டித் துறையினூடாகவே நடைபெற்று வந்தது. பெருங்காடு சந்தியிலிருந்து இறுப்பிட்டித்துறை வரையிலான நான்கு வட்டாரங்களில் இத்தீவின் மொத்தக் குடித்தொகையில் 40 சதவீதத்தினர் வாழ்ந்து வந்தனர். இ.போ.ச. வழித்தடங்கல் 776 யாழ்ப்பாணம்-இறுப்பிட்டியாகவே இருந்தது. 1967இல் குறிகாட்டுவான் தாம்போதி பூர்த்தியானபோதிலும் இறுப்பிட்டிக்கான போக்குவரவில் இ.போ.ச பேரூந்துகளும், தனியார் வாகனங்களும் தொடர்ந்தும் செயற்பட்டு

## மக்கள் மன்றம்

வந்தன. ஆனால் மக்கள் வெளியிடப்பெயர்வின் விளைவாக நீண்டகாலம் பராமரிப்பற்ற நிலையில் காணப்பட்டிருந்த பெருங்காடு-இறுப்பிட்டி வீதி நடந்து கூட செல்ல முடியாதளவிற்கு மிகவும் அழிவடைந்து காணப்படுகின்றது. மக்களினதும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் வேண்டு கோளுக்கிணங்கி காலையிலும் பிற்பகலிலும் இ.போ.ச.பேருந்து சேவையில் ஈடுபட்டிருந்தது. அதுவும் வீதி செப்பனிடும் வரை தம்மால் இச்சேவையினை வழங்க முடியாதெனக்கூறி கடந்த யூன் மாதத்திலிருந்து சேவையிலிருந்து விலகிக்கொண்டது. இவை தவிர உள்ளூர் வீதிகள் எவையும் புனரமைப்புச் செய்யப்படாது இருப்பதும் இங்கு கூறப்படவேண்டியுள்ளது.

### வைத்திய சேவை

மேலும் புங்குடுதீவுக் கிராமத்திற்கு மிக நீண்ட காலமாக சகல வசதி கொண்ட ஒரு மாவட்ட வைத்தியசாலை இயங்கி வந்தது. இது நயினாதீவு உட்பட பல தீவுகளில் வாழும் மக்களின் வைத்திய சேவையை பூர்த்திசெய்திருந்தது. இந்நிலையில் 1991ஆம் ஆண்டின் பின்னர் செயலிழந்த நிலையில் உள்ளது. தற்போது வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டுமே பிற்பகல் வேளையில் வேலணையில் கடமையாற்றும் வைத்தியர் வந்து போகின்றார். இவ்வூரைச் சேர்ந்த மக்களின் முயற்சியினால் புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் இக்கிராமத்து மக்களின் உதவியுடன், மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளரின் அனுமதியுடன் இவ்வைத்தியசாலையில் கணிசமான பகுதி புனரமைத்தும் கொடுக்கப்பட்டது. ஆனால் இக்கிராம மக்கள் தமது வைத்திய சேவையினை பல்வேறு சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாணம் சென்று பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். அத்துடன் இவ்வைத்தியசாலையின் அமைவிடம் இக்கிராமத்தின் தென் அந்தத்தில் உள்ளது. வைத்தியர் இல்லாத நிலை ஒருபுறமிருக்க, நோய்வாய்ப்பட்டவர்கள் குறித்த இரு பிற்பகலிலும் வந்து போவதற்கான போக்குவரத்து இல்லாத நிலைமட்டுமல்லாது பிரதான வீதியிலிருந்து வைத்தியசாலைக்குச் செல்லும் ஒருகிலோ மீற்றர் பாதை மிகவும் சீர்கெட்டுக் காணப்படுகின்றது.

### கால்நடைகள் விஷஜந்துக்களின் உறைவிடமாகின்ற குடியிருப்புகள்

புங்குடுதீவுக் கிராமத்தில் 1970களின் பிற்பகுதியிலிருந்து குக்கிராமங்களுக்குக்கூட மின்சார இணைப்பு இருந்துள்ளது. ஆனால் தற்போது இங்கு வாழ்ந்துவரும் மக்கள் அதனை அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளதுடன் இதனால் மாணவர்களினது கல்விநிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளதைக் காணமுடிகின்றது. மின்சாரசபை இதற்கான ஆரம்ப வேலைகள் தொடங்கியிருந்த போதிலும் அவை கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் இக்கிராமத்தில் காணப்படக்கூடிய சுமார் 3500 குடியிருப்புக்களில் 80.0 சதவீதத்திற்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் மக்கள் வாழாத நிலையில் கால்நடைகள், விஷஜந்துக்களின் உறைவிடமாகியுள்ளது. குறிப்பாக இக்கிராமத்திலுள்ள குடியிருப்புக்களில் 90.0 சதவீதத்திற்கு மேற்பட்டவை கல்வீடுகளாக இருப்பதுடன் பெரும்பாலான வீடுகள் 1960களின் பின்னர் கட்டப்பட்டவையாகும். இவையாவும் அழிவுற்ற நிலையில் கதவுகள், யன்னல்கள் அற்றுக் காணப்படுகின்றதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.

இத்தகைய பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியில் வாழ்ந்துவரும் மக்களின் அன்றாட தேவையினை பூர்த்தி செய்வதற்காக இக்கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் காலத்துக்குக் காலம் தொடர்ச்சியாக விண்ணப்பம் செய்துகொண்டே இருக்கின்றார்கள். ஆனால் கண்டதோ எதுவுமில்லை.

குறிப்பாக 1996ஆம் ஆண்டின் பின்னர் இன்று வரை பதவிவகித்து வந்த மூன்று அரச அதிபர்களை இவ்வவல நிலையினை அவர்களே பார்த்துத தெரிந்து கொள்ளுமாறு இக்கிராம மக்களால் அழைத்துச் செல்லப்பட்டு பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டது. அவர்கள் அதனை பூரணமாக ஏற்றுக்கொண்டனர. விரைவில் இதனைப் பூர்த்தி செய்யலாம் எனக்கூறிச் சென்றனரேயொழிய இது வரையிலும் எதுவும் நடைபெறவில்லை என்பது தான் யதார்த்தம்.

இக்கிராமத்தினைச் சொந்த இடமாகக்கொண்ட மக்களில் கணிசமானவர்கள் மீண்டும் தமது கிராமத்தில் சென்று வாழவே விரும்புகின்றனர். குறிப்பாக வயதில் மூத்தோர் தாம் வாழ்ந்த கிராமத்திலேயே வாழ விரும்புகின்றனர். ஆனால் குறைந்த பட்சம் போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, மின்சார வசதி என்பன கிடைக்கப்பெறும் பட்சத்தில் அவர்கள் மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளத் தயாராகவுள்ளனர்.

எனவே பின்வரும் விடயங்களை உடன் பூர்த்தி செய்து மக்களின் அன்றாட வாழ்வுக்கு வழி சமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

- இக்கிராமத்தில் 40.0 சதவீதமான மக்கள் வாழ்ந்து வந்த 1இ4இ5இ6ஆம் வட்டார மக்களின் மீள் குடியேற்றத்தினை மேற்கொள்வதற்கு உந்து சக்தியை ஏற்படுத்தவும், தற்போது வாழ்ந்துவரும் மக்கள் மற்றும் பள்ளிச்சிறுவர்கள், ஆசிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் அடிப்படையாகவிருக்கும் 5.3 கிலோமீற்றர் தூரமான பெருங்காடு-இறுப்பிட்டி வீதியினை உடன் புனரமைத்துத்தருதல்.
- 1970களில் இ.போ.சபை புங்குடுதீவுக் கிராமங்களுடாக குறிப்பாக வல்லன் வீராமலையூடான போக்குவரத்தினைக்கூட திறம்பட நடாத்தி வந்துள்ளது. அதேபோலவே அரைமணித்தியாலத்திற்கு ஒரு பேருந்து என இறுப்பிட்டிக் கிராமத்திற்கு சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். இவர்கள் தவிர தனியார் பேரூந்துகளும் இயக்கப்பட்டிருந்தன. இன்று புனரமைக்கப்படாத வீதியூடாக சேவையாற்ற முடியாது எனக் கைவிரித்துவிட்டனர்.

### இளமுருகன்

- எனவே, இ.போ.சபையின் உடனடியாக போக்குவரத்தில் தம்மை இணைத்துக்கொள்வது அவசியமாகின்றது. அரசே இதனைச் செய்யமுடியாது எனக்கூறும் நிலையில் தனியாரால் இது சாத்தியப்படமுடியுமா என்பதை சற்றுச் சிந்திக்கவேண்டும்.
- மக்களின் வாழ்வாதாரத்தின் அடிப்படையான விடயம் வைத்தியசாலை. இதனை உரிய வகையில் இயங்க வைக்க வேண்டும். நிரந்தரமான மருத்துவர்களை நியமிக்க வேண்டியது அரசின் கடமையாகும். பல்வேறு வழிகளில் சிரமங்களின் மத்தியில் கிராம மக்களுக்காக சேவையாற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வைத்திய சேவை செய்து வந்த தனியார் மருத்துவர் ஒருவர் அண்மையில் காலமாகிவிட்டார். முதுமையடைந்தோர், கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் பாதிப்புற்றவர்களாகவுள்ளனர். இந்நிலையில் உடனடியாக மருத்துவர் ஒருவரை நியமிப்பதுடன் வைத்தியசாலைக்குச் சென்றுவரக் கூடிய வகையில் போக்குவரத்து சேவையினை ஏற்படுத்திக்கொடுக்கப்படல் வேண்டும். அத்துடன் ஏழைப்பிள்ளைகளின் எதிர்காலம் கருதி ஏற்கனவே இருந்த மின்சாரத்தினை வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மனிதாபிமான அடிப்படையில் இம்மக்களின் அவல நிலையினை கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அரசினதும், மாவட்ட நிர்வாகத்தினதும், இம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் வாதிகளினதும் தலையாய கடமை என உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதே இக்கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும். ✱

**கோழிக் குஞ்சு விற்பனை** 11.08.2007 சனிக்கிழமை
புறெயிலர் குஞ்சு பெற்றுக்கொள்ளலாம். முன்பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (63390)

## ஆண்டுகள் ஆறாயினும் ஆறாது எம்மனம்



காஸ்யப கோத்திரம்
அமரர்
**சிவஸ்வாமிக்குருக்கள் பரமேஸ்வரசர்மா**
(அராலியூர்)
திதி:ஆடி அபரபக்க தசமி (07-08-2007)

அன்புள்ளவரே அப்பா!
இன்றுடன் ஆறு ஆண்டுகள் ஆனதுவே
ஆயிரம் ஆண்டுகள் போல் சோகத்துடன் நாம்
ஆராதனை செய்கிறோம் தினம் தினம்
முன்னோருடன் உறவாடியது போதும்
எம்முடன் உறவாட வாருங்கள் மீண்டும்.

பூவுலகில் 11-08-1929 மேலுலகில் 14-08-2001

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனைசெய்யும்.
'பரணி வாசம்'
கந்தரோடை. (சி/53164) -குடும்பத்தினர்.

## சபிண்டீகரண அழைப்பு



அமரர்
**ஏகாம்பரம் விருத்தாசலம்**

தோற்றம் 04.04.1936 மறைவு 25.07.2007

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும். கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும் இறுதிக்கிரியைகளுக்கும் அதனைத் தொடர்ந்து பலவழிகளிலும் உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன்-

நாளை (08.08.2007) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் கல்லெடுப்பு சபிண்டீகரணக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

கந்தசாமி கோயிலடி,
பொலிகண்டி. (63381) -குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1976 ஆம் ஆண்டு, சித்திரை நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற அழகிய Programme Assistant பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை.
**மே/பா.உதயன் 2996**
(63392)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 21 - 01 - 1922



இறப்பு 06 - 07 - 2007

**அமரர் மரியான் குருஸ்**
(ஓய்வுபெற்ற சேவகர், துறைமுக கொமிஷன்)

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அன்பு உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (07-08-2007) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு அவரின் ஆன்ம இறைப்பாற்றிக்காகச் செபிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கலைமான் நீரோடைக்கு ஏங்கித் தவிப்பதுபோல்**
**எங்கள் உள்ளம் உமக்காகத் தவிக்கின்றது.**

12,மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (63154)
அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சந்தாம்பிள்ளை சகாயசீலன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

எமது பாடசாலையின் ஆசிரியை *திருமதி ராஜினி சகாயசீலன்* அவர்களின் அன்புக் கணவர் சகாயசீலனின் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம். (63388)

**விமான பொதிகள் சேவை**
உங்கள் பொதிகளை யாழ் - கொழும்பு அல்லது கொழும்பு - யாழ் தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.
கிளியரன்ஸ் இல்லாத பொருட்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்
கொழும்பு - யாழ் - 1Kg 250/=
யாழ் - கொழும்பு - 1Kg 200/=
EURO GROUP OF COMPANIES
35, STATION RD, MOUNT LAVINIA.
TEL: 077 3846998, 0114 542190
INTERNATIONAL COURIER SERVICE
11, VIHARA LANE, COLOMBO 06.
TEL: 011 4961196, 077 3561891

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 - 07 - 1933



இறப்பு 29 - 07 - 2005

**அமரர் வி.திருஞானசம்பந்தர்**
திதி: அபரபக்க நவமி (07-08-2007)

**ஆண்டுகள் இரண்டு போனாலும்**
**காணும் இடமெல்லாம் நீங்கள்**
**உடலால் பிரிந்தாலும் எம்**
**உள்ளத்தில் நிலைத்து வாழ்கிறீர்கள்.**

18, பிரம்படி வீதி,
கொக்குவில். (63154)
ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மாறி மாறி முன்வைக்கப்படும் முத்தரப்பின் குற்றச்சாட்டுகள்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மூன்று பிரதான தரப்புகள் ஒவ்வொன்றும் மற்றையவை இரண்டின் மீதும் மாறி மாறி சுமத்தும் குற்றச்சாட்டுகள் சுவாரசியமானவை.

மற்றைய இரண்டு தரப்புகளுமே சேர்ந்துகொண்டு, கூட்டாகச் செயற்படுகின்றன என்றுதான் மூன்றாவது தரப்பு குற்றம் சுமத்துகின்றது. அதை சற்று விரிவாகப் பார்ப்பது இன்றைய காலகட்டத்தில் பொருத்தமானது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இங்கு இன்றைய நிலையில் முக்கிய மூன்று தரப்புகள் எவை?

ஒன்று - தமிழர் தரப்பில் அவர்களின் உரிமைக்கான போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள்.

அடுத்தது - தமிழர் தரப்பின் உரிமைகளை மறுக்கும் அடக்குமுறைக் கட்டமைப்பாக தென்னிலங்கை அரசும் அதன் ஆட்சியாளர்களும்.

மூன்றாவது - அந்த அரசுக்கு ஒருபுறம் தலையிடியாகவும் அதேசமயம் அந்த அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் சதா ஈடுபட்டுக்கொண்டும் இருக்கும் மாற்றுத் தரப்பாக தென்னிலங்கையின் பிரதான எதிர்க்கட்சி.

இந்த மூன்று தரப்புகள் ஒவ்வொன்றும் மற்றைய இரு தரப்புகள் மீதும் சுமத்துகின்ற குற்றச்சாட்டு விசித்திரமானது.

இன்று ஆட்சிப்பீடத்துக்கு வந்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இருந்து இன்று வரை புலிகள் மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. ஆகியவை மீது ஒரே பாணியிலான குற்றச்சாட்டையே சுமத்தி வருகின்றார். ஐ.தே. கட்சியினரும் புலிகளும் ஒரே நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கூட்டுச் சேர்ந்து செயற்படுகின்றார்கள் என்பதே அதுவாகும்.

கடந்த ஞாயிறன்று குருநாகலில் நடத்திய தமது பெரும் பிரசாரக் கூட்டத்திலும் கூட இதனையே அவர் தெரிவித்திருக்கின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில், புலிகள் - ஐ.தே.க. இரக்சிய ஒப்பந்தம் இருப்பதாகத் தெரிவித்து, பெரும் பரப்புரைகளை மேற்கொண்ட மஹிந்தர் அணி, அதன் மூலம் தென்னிலங்கையை பிழையாக வழிநடத்த ஏமாற்றி, கணிசமான வாக்குகளைச் சுருட்டி, ஒருவாறு சமாளித்துக் குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தேர்தலில் வெற்றிபெற்றது.

அந்தத் தேர்தல் வெற்றிக்குப் பின்னரும் இந்தப் பிரசாரம் ஓயவில்லை. புலிகளுக்கு சார்பாக - அவர்களோடு சேர்ந்து - ஐ.தே.கட்சி செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டே ஆளும் தரப்பால் தொடர்ந்து முழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இதே பிரசாரத்தை மறுபுறமாகத் திருப்பிப்போட்டுத் தனது பரப்புரைகளை முன்னெடுக்கிறது பிரதான எதிரணிக்கட்சியான ஐ. தே. க.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலேயே மஹிந்த - புலிகள் இரகசிய ஒப்பந்தம் இருந்தது என்று குற்றம் சுமத்தும் ஐ.தே. கட்சி, அதன் அடிப்படையிலேயே தமிழர் தாயகத்தில் ஐ.தே.க. தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கவிருந்த வாக்குகளைத் தடுக்கும் விதத்தில் தேர்தல் பகிஷ்கரிப்பு நாடகத்தைப் புலிகள் அரங்கேற்றினார்கள் என்றும் விளக்கம் அளிக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் பின்னரும் புலிகளுக்குப் பெரும்தொகைப்பணம், மஹிந்த ராஜபக்ஷ தரப்பினால் வழங்கப்பட்ட பின்னர் இப்போதும் கூட மஹிந்தர் - புலிகள் கூட்டுச் செயற்பாடு இரகசியப் புரிந்துணர்வோடு தொடர்கின்றது என்பதுதான் ஐ.தே.கட்சி தற்போதும் முன்னெடுக்கும் வாதம்.

கிழக்கை முழுவதுமாக அரசுப் படைகள் மீட்டுவிட்டன என்று அறிவிக்கும் விதத்தில் கிழக்கு மாகாணத்தில் கடைசியாக முன்னெடுக்கப்பட்ட குடுமிமலைச் சமரிலும் கூட இந்தப் புரிந்துணர்வு, அரசு - புலிகள் இணக்கப்பாடு, நீடித்தது என்றும், அதனடிப்படையிலேயே தொப்பிகல காட்டுப் பகுதியில் பல நூற்றுக்கணக்கில் நிலைகொண்டிருந்த புலிகளின் உறுப்பினர்களும், பிராந்தியத் தலைவர்களும், தங்களது வலிமையான ஆயுதங்களோடு இழப்பின்றித் தப்பிச்செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டனர் என்றும் ஐ.தே.கட்சி கதை விடுகின்றது.

இப்படி சிங்கள ஆளும் தரப்பின் பக்கத்தில் இரண்டு பெரிய கட்சிகளுமே ஒன்று மற்றொன்றை புலிகளின் நேச சக்தியாக அடையாளப்படுத்துதன் மூலம் தனது செல்வாக்கை - ஆதரவை - தெற்கில் வளர்த்துக் கொள்ளப் படாதபாடு படுகின்றன.

சரி. மூன்றாவது தரப்பான புலிகள் என்ன கூறுகின்றார்கள்?

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை - நீதியுடன் கூடிய உரிமைக்குரலை - கௌரவத்துடன் கூடிய வாழ்வை - மறுத்துரைப்பதில் தென்னிலங்கைச் சிங்களம் ஐக்கியப்பட்டே நிற்கின்றது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் அதைத் தக்கவைப்பதற்குமாக தென்னிலங்கை அரசியல் தலைமைகள் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்று கன்னை பிரித்துத் தங்களுக்குள் எதிரும் புதிருமாக மோதிக்கொண்டாலும் கூட, தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை மறுப்பதிலும் தமிழரின் தேசிய எழுச்சியை அடக்குவதிலும், அரச ஒடுக்குமுறையைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடுவதிலும் அவர்கள் தமக்குள் ஐக்கியப்பட்டு, ஒரே முனைப்பாகவே செயற்பட்டு வருகின்றனர். தமிழர் பக்கத்தில் உள்ள வரலாற்று நியாயங்களையோ, அவற்றில் பொதிந்துகிடக்கும் உரிமைக்கான நீதிப்பண்புகளையோ புரிந்துகொள்ளும் மனப்பக்குவமோ திராணியோ அவற்றுக்குக் கிஞ்சித்தும் கிடையாது.

பௌத்த - சிங்களத் தேசப்பற்றாளர்களாகத் தங்களை இனங்காட்டி, எதிராளிக் கட்சிக்காரரைக் காட்டிலும் தமிழ் விரோ தப் போக்கில் தாங்கள் சூரர்கள் என்பதை வெளிப்படுத்தி, அதன் மூலம் தென்னிலங்கை சிங்கள அரசியல் லாபம் தேடுமகீழ்த்தரமான தந்திரோபாயப் போக்கைக் கைக்கொள்ளும் சிங்களத் தலைமைகள் இரண்டுமே, தமிழர் அடக்குமுறை விவகாரத்தில் ஒன்றித்தே - ஒரு நிலைப்பாட்டிலேயே - நிற்கின்றன.

இவ்வாறு முத்தரப்பில் ஒவ்வொரு தரப்பும், மற்றைய இரண்டு தரப்புகள் சேர்ந்து தமக்கு எதிராகச் செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைக்கும் நிலையில் இலங்கையின் அரசியல் போக்கு நகர்ந்து செல்கிறது.

இதில் சிங்களத் தரப்புகள் இரண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் குறுகிய அரசியல் லாபத்துக்காகத் தமது குற்றச்சாட்டுகளை இப்படி முன்வைக்கின்றன என்பதும் -

தமிழர் தரப்போ தனது உயிர்வாழ்வுக்கான - இருப்புக்கான - வாழ்வா, சாவா போராட்டத்தின் யதார்த்த நிலைமையை அம்பலப்படுத்திக் காட்டும் விதத்தில் அக்குற்றச்சாட்டை முன்வைக்கின்றது என்பதும் -

துலாம்பரமாக வெளிப்படும் - தோற்றும் - உண்மையாகும்.

# ஆயுதக் கொள்வனவில் அரசாங்கம் தீவிரம்: வன்னி மீதான தாக்குதலுக்குத் தயாராகிறது

கொழும்பு,ஓக.7

இவ்வருடம் ஜூலை மாதத்திலிருந்து டிசெம்பர் வரையில் இலங்கை விமானப் படைக்கு இராணுவ தளபாடங்களையும் ஏனைய பொருள்களையும் கொள்வனவு செய்வதற்காக 7 பில்லியன் ரூபாவை செலவு செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

'ஜேன்ஸ் டிபென்ஸ் வீக்லி' என்ற சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் தனது விமானப்படை உட்பட ஆயுதப் படைகளை மேம்படுத்துவதற்கென 300 பில்லியன் அமெரிக்க டொலரை செலவிட உள்ளதாக அந்தச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஜூலையிலிருந்து டிசெம்பர் வரை இலங்கை விமானப்படையின் பிரதான தளபாடங்களுக்கென 69.6 மில்லியன் அமெரிக்க டொலரை செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. வடக்கில் விடுதலைப் புலிகள் வசமுள்ள பிரதேசங்கள் மீது பெரும் தாக்குதல் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அரசு உத்தேசித்திருப்பதன் காரணமாகவே இந்தத் தளபாட கொள்முதலுக்குத் திட்டமிடப்படுவதாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை -

புலிகள் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்படும் என்ற வகையில் கடந்த 19ஆம் திகதி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஜனாதிபதி கூறியிருந்தார். கிழக்கிலிருந்து புலிகள் முற்றாக துரத்தப்பட்டுவிட்டதாக அவர் கூறினார். ஆனால் இது மிகைப்படுத்தப்பட்ட ஒரு கூற்று என்பது தெரிய வந்துள்ளது. ஜூலை 16ஆம் திகதி கிழக்கு மாகாண செயலாளர் கொல்லப்பட்டதிலிருந்தும் ஜூலை 21ஆம் திகதி அதிரடிப்படையினரால் 5 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதிலிருந்தும் இது புலனாகியுள்ளது.

அரசியல் மற்றும் பாதுகாப்புத்துறை விமர்சகர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த விமர்சனக் கட்டுரையில் இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வட இலங்கையில் பல தொடர் இராணுவத் தாக்குதல்களை நடத்துவது பற்றி கொழும்பில் திட்டமிடப்பட்டு வருகின்றது. ஓகஸ்ட் முற்பகுதியில் இது ஆரம்பமாகக் கூடும் - என்றும் அவர் எழுதியுள்ளார்.

(அ-ப)

### கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட

## இரு சகோதரிகள் உட்பட நால்வருக்கு ரூபா 3¾ லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.7

கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட சகோதரிகள் உட்பட நால்வருக்கு மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே.லுடவை தலைமையில் உதவிப் பொலீஸ் பரிசோதகர்களான எம்.என்.வனிக ரெட்னா, ஜி.நிமலாசிறி ஆகியோர் கொண்ட பொலீஸ் குழு குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதியில் வைத்து நால்வரை கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங் கோவன் முன்னிலையில் ஆஜர் செய் தது.

உரியவர்கள் குற்றத்தை நீதிமன்றின் முன் ஒப்புக்கொண்டனர்.

ஈவினையைச் சேர்ந்த ஜெயக்குமார் தர்சினி என்பவருக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சீனியர் கமலாதேவி என்பவருக்கு 75 ஆயிரம் ரூபாவும் சீனியன் ராதிகாவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் - குப்பிளானைச் சேர்ந்த கணபதி திருச்செல்வத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(அ)

## மதிய உணவுக்குச் செல்லாது பரீட்சை எழுதிய தென்மராட்சி உயர்தர தனிப்பட்ட பரீட்சார்த்திகள்

யாழ்ப்பாணம்,ஓக.7

பரீட்சை எழுதிவிட்டு மதிய உணவுக்கு வீடு செல்ல முடியாத நிலை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முதல் நாளான நேற்று, அதற்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு ஏற்பட்டது.

நேற்று படையினரின் வாகனத் தொடரணி ஏ-9 வீதியில் சென்ற வேளையில், பகல் 11.15 மணிக்கு வீதிப் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. மீண்டும் நண்பகல் 1 மணிக்கு திறக்கப்பட்டது.

முதலாவது பாடத்திற்குரிய பரீட்சை காலை 8.30 மணிக்குத் தொடங்கி நண்பகல் 11.30 மணிக்கு முடிவடையும். ஒரு மணிநேர சாப்பாட்டு இடைவேளையின் பின்னர் இரண்டாவது பாடத்திற்குரிய பரீட்சை 12.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதனால் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மதிய போசனத்துக்குச் செல்ல முடியவில்லை. பாடசாலைச் சீருடை இன்றிச் சென்றதாலேயே தமக்கு இந்தக் கதி ஏற்பட்டதாக அவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலைச் சீருடையில் சென்ற மாணவர்களைப் போக்குவரத்துத் தடையின்போதும் இரண்டொரு பேராகப் படையினர் மதியபோசனத்துக்கு செல்ல அனுமதித்தனர்.

(அ-207)

## ஊரடங்கு நேரத்தில் வீட்டுக்குள் புகுந்த முகமூடி கோஷ்டி கப்பம் கேட்டு மிரட்டியது

### முடிவில் மோ.சைக்கிளை அபகரித்துச் சென்றது

உடுப்பிட்டி,ஓக.7

ஊரடங்கு நேரத்தில் வீடு ஒன்றுக்குச் சென்ற முகமூடி அணிந்த துப்பாக்கிதாரர்கள் கோஷ்டி ஒன்று வீட்டுச் சொந்தக்காரரிடம் 7 லட்சம் ரூபா கப்பம் கேட்டு மிரட்டியது. அதன் பின்னர் வீட்டுச் சொந்தக்காரரின் மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றுள்ளது.

வதிரி, கோட்டத்தெருவில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் சனிக்கிழமை இரவு ஏழு மணிக்குப் பின்னர் இச்சம்பவம் நடைபெற்றது. முகமூடி அணிந்த ஐவர் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து துப்பாக்கியைக் காட்டி கப்பம் கேட்டதாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்டவர் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(அ-1-155)

## சிறுமியின் மரணத்தில் மர்மம்!

சங்கானை,ஓக.7

மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த - இம்மாதத்தில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்த - சிறுமி ஒருவர் மரணமானார். அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

சிறுமியை இறந்த நிலையில் அவரது பெற்றோர் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் சங்கானை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் நேற்று விசாரணைகளை நடத்தினார்.

பிரஸ்தாப சிறுமியின் கழுத்தில் காயங்கள் காணப்பட்டன. துணி ஒன்றினால் அவரது கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது தற்கொலை செய்திருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்ட நீதிவான் சடலத்தை ஆஸ்பத்திரியில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 23 | புதன்கிழமை 08.08.2007 |
| திதி : தசமி | மு.பகல் : 11.09 |
| நட்சத்திரம் : | ரோகிணி |
| | பி.பகல் : 03.11 |
| சுபநேரம் | : 04.34 - 06.04 |
| ராகுகாலம் | : 12.04 - 01.34 |

## சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்





சங்கானையூர் சண்முகரத்தினம்

**சிங்கம்:**-(மகம், பூரம், உத்தரம் 1ம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு:

இதுவரை காலமும் ஏழரைச் சனி பகவானுடைய முற்கூறாக இருந்த சனிபகவான் 05.08.2007 சந்திரன், கேதுவுடன் சேர்ந்திருப்பது அடுத்து 2 1/2 வருடம் ஏழரைச்சனி பகவானுடைய நடுக்கூறு காலமாகும். மேலும் இக்காலம் இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு ஜென்மச் சனியினுடைய காலமாகும். 30 வயதை தாண்டாதவர்களுக்கு மங்குசனியினுடைய பலனையே தரும். இது கல்வி, திருமணம், தொழில் போன்றவற்றால் 05.08.2007 இருந்து 2 1/2 வருடங்கள் எதிர் நீச்சல் தரும் காலமாகும்.

30 வயதைத் தாண்டியவர்களுக்கு பொங்கு சனி ஆரம்பம். ஆனாலும் குறிப்பிட்ட 2 1/2 வருடமும் திருமணம், தொழில், குடும்பம் என்ற அடிப்படையில் சதா பிரச்சினைகளும், கஷ்டமும் ஏற்படும். சிலருக்கு தாய் வழித்துன்பம், தாய்வழியால் ஏற்படும் கஷ்டம் என்பன உண்டு. திருமண விடயத்தில் திருமண வயதுடையவர்களுக்கு திருமணத்தை கொடுத்து கெடுத்தும் விடக்கூடிய பலனாகும். அதாவது உலக இன்பங்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் காரணமான இரத்தமும், சதையும், ரோமமும் கொண்ட மனிதன் என்று சொல்லப்படும் சந்திரனாகிய சரீரத்தில் முத்தியைக் கொடுக்கும் சனி பகவான் சேர்க்கை திருமணபந்தங்களால் குழப்பத்தையும் பிரிவையும் தருவார். எனவே இந்த ராசிக்காரர்கள் பொருத்த நிலையில் பெண், ஆணுடைய சனி, சந்திரனுடைய பார்வை, சேர்க்கை என்பன கணித்து திருமணம் செய்ய வேண்டும்.

குறிப்பாக ஏழரை நடுக்கூறு நடக்கும் இந்த ராசிக்குரியவர்கள் வெறும் பாவநிலைப் புள்ளியை வைத்துக் கொண்டு திருமணம் செய்வதால் நற்பலன் கிடைப்பது மிகக் குறைவு.

60 வயதை தாண்டிய இந்த இராசிக்காரர்களுக்கு சனிபகவானுடைய 3ஆம் சுற்று இரத்தம் கெடக்கூடிய சுகயீனங்களும், சிகிச்சையும் தருவதுடன் 16.09.2007 உடல் நிலையில் அவதானம் பேணவேண்டிய காலமாகும்.

**மாணவர்களுக்கு:**- கல்வி நிலை நன்மை தரும் 15.11.2007இன் மேல் 5இல் குரு வருவதும் குரு, சனி, கேது, சந்திரனை நோக்குவதும் மேற்கூறிய திகதிக்குப் பின்னர் கல்வியால் நற்பலனும் உயர் நிலையும் உண்டு. வியாழ பகவானே 5ம் இடத்தில் ஆட்சியாக இருந்து நன்மை தருவார்.

**தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு:**- உங்களுடைய தொழில் கிரகம் சுக்கிரன் நன்மைதருவார். மேலும் ஆசிரியர் அல்லது அதற்குச் சமமான தொழில் செய்வோர்க்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து தொழிலால் உயர் நிலையும் உயர்ச்சியும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் கிளைமோர் தாக்கு: இராணுவச் சிப்பாய் ஒருவர் பலி!

கொழும்பு, ஓகஸ்ட் 7

வவுனியா, செங்கலடிப் பிளவுட் பகுதியில் வீதிரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன், இன்னொரு சிப்பாயும் படுகாயமடைந்திருக்கிறார். படுகாயமடைந்துள்ள படைச்சிப்பாய் வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார். சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (சி)

## ...ருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன அணிக்காக மூடப்பட்ட இந்தப் பாதை, சேதமடைந்த வானம் அகற்றப்பட்ட பின்னர் பிற்பகல் 3 மணியளவில் பொது மக்கள் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. இச்சவம்பவம் காரணமாக அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

(அ-1-203-155-115-78-15)

## கருணா அணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு கூறியவை வருமாறு:-

இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கையில் ஆயுத கலாசாரம் உள்ளது. வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி தெற்கும் இந்த ஆயுதக்கலாசாரத்தால் ஈர்க்கப்பட்டது.

அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சில அதிரடி நடவடிக்கைகள் மூலம் தெற்கில் ஆயுதக்கலாசாரம் ஒழிக்கப்பட்டு ஆயுதம் ஏந்தியவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்கப்பட்டனர்.

ஆனால், வடக்கு, கிழக்கில் இன்றும் ஆயுத கலாசாரம் உள்ளது . அதற்கு யுத்தம் என்று பெயர். தற்போது கிழக்கை அரசு கைப்பற்றிவிட்டது. அங்கு முழுமையான ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது.

### அரசியல் செயற்பாட்டில் கருணா குழுவினர்

கிழக்கில் பல ஆயுதக்குழுக்கள் சட்ட விரோதமான முறையில் செயற்படுவதை நாம் அறிவோம். அரசு கிழக்கில் முன் கொண்டு செல்லும் அபிவிருத்தி மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகள் மூலம் இந்த ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களை களைந்து ஜனநாயத்திற்கு திரும்பும்.

கிழக்கில் பரவலாகப் பேசப்படும் ஆயுதக்குழுவினர் கருணா அணியினரே. அவர்கள் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர்.

புலிகளிடமிருந்து அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் நிரந்தரமாகவே உள்ளது. அவர்கள் அதிலிருந்து தப்பிக்கொள்வதற் காகவே ஆயுதங்களை ஏந்தியுள்ளனர்.

இந்தநிலையில் அவர்களை உடனடி யாக ஆயுதங்களைக் களையச் செய்வது தற்போதைக் குச் சாத்தியப்படாது. அரசால் ஆயுதங்கள் வழங்கப்பட்டவர்களை மாத்திரமே உடனடியாக ஆயுதங்களைக் களையச் செய்ய முடியும்.

அரசு முப்படையினருக்கு மாத்திரமே ஆயுதங்களை வழங்கியுள்ளது. வேறுஎவருக்கும் ஆயுதங்களை வழங்கவில்லை. இருந்தும் கால ஒட்டத்தில் கருணா அணியினர் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு முற்றாக ஜனநாயகத்தில் இணைவது அவசியம்.

இதுதொடர்பாக அரசு முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் உள்ளது. கிழக்கை அபிவிருத்திசெய்து அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டும் அரசின் திட்டத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்படும் - என்றார். (சி)

## ராடர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வைகோ அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களையும் குழந்தைகளையும் கொன்று குவிக்கும் விமானப்படைக்கு ராடர்களை வழங்கியதையிட்டு அதிர்ச்சியடைந்தேன்.

2004ஆம் ஆண்டு எமது கட்சி உட்பட பல கட்சிகள் தெரிவித்த எதிர்ப்பைத் தொடர்ந்து இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகவில்லை. ஆனால் இந்த ஒப்பந்தத்தில் மறைமுகமான பங்காளராக இந்தியா செயற்படுவதாக மத்திய அரசு மீது குற்றம் சுமத்துகிறேன்.

இந்தியா கடந்த ஜனவரியிலும் ஜூனிலும் கூடுதலான ராடர்களை இலங்கைக்கு விநியோகித்தாக அறிகிறேன்.

உடனடியாக ஆயுத விநியோகத்தை நிறுத்த வேண்டும். இலங்கைக்கு வழங் கிய ராடர்களைதிரும்பப்பெறவேண்டும் - என்று வைகோ தமது கடிதத்தில் தெரி வித்துள்ளார். (அ-1)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹோம்ஸ் இலங்கை அரசிடம் கோரியுள் ளார்.

தொண்டுநிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட ஓராண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கோரிக்கையினை விடுத்தார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:-

ஐ.நா. மன்றத்தலைமைச் செயலாளர் ஏற்கனவே விடுத்திருந்த கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். இதில் உண்மையைக் கண்டுபிடிக்க வேண் டும் என்கிற உறுதிப்பாடும், முழுவீச்சில் செயல்படும் தன்மையும் தேவை. குற்றம் நடந்து ஓராண்டு கழிந்தநிலையில், இதற் காக யாரும் கைது செய்யப்படவில்லை. குற்றம் சட்டப்படவுமில்லை. இதில் உண்மைக்கு அருகில் போனதாகவே தெரிய வில்லை.

சர்வதேச மனித நேய சட்டங்களின்படியும், இலங்கையின் சட்டவிதிகளை மதிக்கும் வகையிலும், இந்தப் பதினேழு பேரும், அவர்கள் செய்துவந்த செயல்களுக் காக, பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டுமே தவிர, இதற்காக குறிவைக்கப்பட்டிருக் கக்கூடாது - என்றார். (சி)

## மனித உரிமை மீறல்களைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கையில் புலிகளுடனான சண்டை கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை முதல் சட்டத்துக்கு முரணான படுகொலைகள், வல்வந்தமாகக் காணாமற்போகச் செய்தல் மற்றும் இதர பாரதூரமான மனித உரிமை மீறல்கள் பரவலாக இடம்பெற்றுவருகின்றன. இவற்றுக்கு இலங்கை அரசே பொறுப்பாகும்'' - என்று அந்த அறிக்கை விசேடமாக இலங்கை அரசு மீது காட்டமாகக் குற்றம் சுமத்துகின்றது.

'தண்டனை விலக்களிப்பு ஏற்பாட்டின்கீழ் தன்னைப் பேணிக்கொண்டு கொலைகள், வல்வந்தமாகக் கடத்தல், அதிகரித்துவரும் இடம்பெயர்வுகள் ஆகியவற்றை முனைப்புறவைத்து துஷ்பிரயோகம் செய்யும் இலங்கை அரசு' - என்ற மகுடத்தின் கீழ் நேற்று இந்த அறிக்கையின் விவரம் வெளியாகியுள்ளது.

இந்த அறிக்கை குறித்து வெளியான இணையத்தளச் செய்தியின் சாராம்சம் வருமாறு:-

கடந்த 18 மாதங்களுக்கு மேலாக இலங்கை அரச படைகளின் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றமை கண்கூடு. இந்தத் துஷ்பிரயோகங்களை மனித உரிமைகள் அவதானிப்பு மையம் ஆவணப்படுத்தியுள்ளது. அதேவேளை, இலங்கையில் ஐ. நா. கண்காணிப்புக் குழுவை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஆதரவு நல்குமாறு மனித உரிமைகள் அவதானிப்பு மையம், இலங்கைக்கான நன்கொடையாளருக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய அரசுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு தமிழ் ஆயுதக்குழுவாகும். குறிவைக்கப்பட்ட சிவிலியன் கொலைகள், பலாத்கார பண வசூலிப்பு, சிறாரைப் படைக்குப் பயன்படுத்துதல் ஆகியவை போன்ற பாரதூரமான குற்றச் செயல்களுக்கு அவ்வியக்கமும் பொறுப்பாகும். இவற்றை மனித உரிமைகள் அவதானிப்பு மையம் அவ்வப்போது ஆவண வடிவில் பதிவு செய்துள்ளது. அத்துடன் இதற்கான கண்டனங்களையும் தெரிவித்து வந்துள்ளது.

இந்தப் புதிய அறிக்கை 129 பக்கங்களைக் கொண்டது. ''போருக்கு மீளுகை: முற்றுகைக்குள் மனித உரிமைகள்'' என்ற தலைப்பில் இது வெளியாகிறது.

### சாட்சிகளின் அனுபவப் பதிவோடு கூடிய ஆவணங்கள்

அரச படைகளால் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைச் சம்பவங்களில் ஏற்பட்டுவரும் அதிர்ச்சியூட்டும் துரித அதிகரிப்புத் தொடர்பான அனர்த்தங்கள், பாதிக்கப்பட்டோரினதும் கண்கண்ட சாட்சியங்களினதும் அனுபவப் பதிவோடு இதில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

உக்கிர வன்முறைத் தாக்குதல்களுக்கு இலக்காகும் தமிழர்கள் அவற்றைச் சகிக்கவேண்டிய நிலையிலும் உள்ளார்கள். அதேவேளை முஸ்லிம் இன உறுப்பினர்களும் பெரும்பான்மையினரான சிங்கள மக்களும் கூட அரசின் இத்தகைய துஷ்பிரயோகப் பாதிப்புகளில் இருந்து விலக்களிக்கப்பட்டவர்கள் அல்லர் என்றும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

''பாதுகாப்புப் படைகள் 'கீழ்த்தரமான யுத்த யுக்திகளை'க் கையாள்வதற்கு வெளிப்படையாகவே இலங்கை அரசு பச்சைக் கொடிகாட்டியுள்ளது'' என மனித உரிமைகள் அவதானிப்பு மையத்தின் ஆசிய பணிப்பாளர் பிரேட் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார்.

''ஆனால் அதேவேளை புலிகளின் துஷ்பிரயோகங்களைக் காரணமாகக் காட்டி அரசுத் தரப்பு முன்னெடுக்கும் கொலைகள், காணாமற் போகச் செய்தல், இடம்பெயர்ந்தோரை மீளச் செல்லுமாறு நிர்ப்பந்தித்தல் போன்றவற்றை நியாயப்படுத்திவிட முடியாது'' என்றும் பிரேட் ஆடம்ஸ் எடுத்துரைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான 2002 ஆம் வருடத்திய யுத்த நிறுத்த உடன்படிக்கை தொழில்நுட்ப ரீதியாக நடைமுறையில் இருப்பதாகக் கூறப்பட்டாலும் பாரிய சண்டை 2006 ஆம் வருட மத்தியில் மீள ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

சிவிலியன்களின் பாதுகாப்புக் குறித்து சொற்ப கரிசனை மட்டும் காட்டிக்கொண்டு நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் இராணுவ நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் முன்னெடுத்து வருகின்றனர் என மனித உரிமைகள் அவதானிப்பு மையம் குறிப்பிட்டுள்ளது.

### மனித நேய உதவிகள் கிடைப்பது தடுக்கப்பட்டது

கண்மூடித்தனமான தாக்குதல்களை அப்பாவிகள் மீது தொடுத்துள்ள அரசுப் படைகள் அதன் மூலம் மனிதநேய உதவிகள் அவர்களுக்குக் கிட்டுவதைத் தடுத்துள்ளன.

2006 ஆம் வருட ஓகஸ்ட் முதல், சண்டையின் காரணமாக சுமார் மூன்று லட்சத்து 15 ஆயிரம் பொதுமக்கள் தம் வீடுவாசல்களை விட்டு ஓடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளார்கள். இவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் தமிழரும் முஸ்லிம்களுமாவர். மார்ச் மாதத்தில் மாத்திரம் ஏறத்தாழ ஒரு லட்சம்பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அதேவேளை, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத பிரதேசங்களுக்கு மீளத் திரும்பிச் செல்லுமாறு அநேகர் அரச அதிகாரிகளால் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் ஆள் கடத்தல்கள், 'காணாமற் போகச் செய்தல்' என்பன குழப்பமூட்டும் வகையில் அதிகரித்துச் செல்வதை மனித உரிமைகள் ஆவணப்படுத்தியுள்ளது. 2006 ஜனவரிக்கும 2007 ஜூனுக்குமிடையில் இத்தகைய 4 ஆயிரத்து நூறு புதிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்வாறு காணாமற் போயுள்ளோரில் பெரும்பாலானோர் தமிழர்களே.

ஆள் கடத்தல் சம்பவங்களைப் பொறுத்தமட்டில், இவற்றிற்கு நீண்டகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பாளர்களாக இருந்து வந்துள்ளார்கள். எனினும் இது விடயத்தில் இப்போது இடம்பெற்றுள்ள 'காணாமற் போகச் செய்தல்' சம்பவங்களில் அரச படைகள் அல்லது அரச படைகளுடன் இணைந்து செயற்படும் ஒட்டு ஆயுதக் குழுக்களே அவை சம்பந்தப்படுகின்றன.

இராணுவத்தின் கடும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் ஒன்றான வடக்கு யாழ். குடாநாட்டில் மாத்திரம் 2005 டிசம்பருக்கும், 2007 ஏப்ரலுக்கும் இடையில் 800 இற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர் என முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 241 பேர் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### ஆள் கடத்தலில் படையினர் சம்பந்தம்

பெரும் எண்ணிக்கையான ஆள் கடத்தல் சம்பவங்களில் பாதுகாப்புப் படைகள் ஈடுபட்டுள்ளன அல்லது அவற்றுக்குச் சம்பந்தமுண்டு எனச் சாட்சிகளும் குடும்ப உறுப்பினர்களும் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் தொடர்ந்தும் இதுவரை சமாதானச் செயற்பாடுகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளை இப்போது கிரிமினல் குற்றங்களாக அர்த்தப்படுத்தி நடவடிக்கை எடுக்கும் விதத்தில் 2006 ஓகஸ்டில் அவசரகாலச் சட்ட விதிகளை அரசு அறிமுகப்படுத்தியது.

அரசியல் எதிரிகளுக்கும் ஊடகத் துறையினருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இந்த விதிகளை அரசு பயன்படுத்தியது.

ஓகஸ்ட் 2005 இலிருந்து ஊடகப் பணியாளர்கள் 11 பேர் படுகொலை செய்யப்படும் அளவுக்கு மோசமடைந்து வரும் ஊடகச் சுதந்திர நிலைவரத்தையும் இந்த அறிக்கை ஆவணப்படுத்தியிருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்த தமிழ் ஊடகவியலாளர், தமிழீழ விடுதலைப்புலிகளினதும் அரசினதும் கடும் மிரட்டல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அதேசமயம் விமர்சனத்துக்குரிய செய்திகளையும் கண்ணோட்டங்களையும் வெளியிடும் சிங்கள, மொழிப் பிரசுரங்களும் அரசின் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளன.

### விமர்சிப்போரை மௌனிக்கச் செய்கிறது அரசாங்கம்

இந்த ஆயுதப் பிணக்குத் தொடர்பான தமது அணுகுமுறை குறித்தோ அல்லது மனித உரிமை பேணல் போக்குப் பற்றியோ கேள்வி எழுப்புவோரையும், விமர்சிப்போரையும் மௌனிக்கச் செய்ய முயல்கிறது அரசு. சமாதான விமர்சகர்களை அது 'தேசத் துரோகிகள்', 'பயங்கரவாதிகளின் அனுதாபிகள்', தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள்' என்றெல்லாம் பட்டம் சூட்டி நிராகரிக்கின்றது.

''அரசு, புலிகளுடனான தனது பிணக்கையும், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை உரிமைகளையும் இலங்கையில் தனக்கு மாறுபட்ட கருத்துடையவர்களை அடக்கி, ஒடுக்கித் தன் வழிக்குக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்துகின்றது'' என்கிறார் ஆடம்ஸ்.

''பிணக்குகளுக்கு மத்தியிலும் கூட கருத்து வெளியிடும் சுதந்திரம் பேணப்பட்ட ஒரு நாட்டில் இத்தகைய திருப்பத்தை ஏற்படுத்தும் போக்கு நிகழ்ந்திருப்பது பெரும் குழப்பத்தைத் தருகின்றது'' - என்கிறார் அவர்.

2004ஆம் ஆண்டு, தழிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்துசென்ற கருணா அணி ஒரு தமிழ் ஆயுதக் குழுவாகும்.தற்போது இது விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கைப் படைகளுக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறது. அத்துடன் இது ஆட்களைக் கடத்துவதிலும், சிறார்களையும், இளைஞர்களையும் பலவந்தமாக தனது படையில் சேர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றது. இச் செயற்பாடுகள் அரசின் சம்பந்தத்தோடு அல்லது சம்மதத்தோடு மேற்கொள்ளப்படுகின்றன.

டிசம்பர் 2006 முதல் இவ்வாறு கருணா குழுவில் சேர்க்கப்பட்ட அல்லது மீளச் சேர்க்கப்பட்ட 145 சிறார் பற்றிய பதிவை யுனிசெவ் ஆவணப்படுத்தியுள்ளது. இப்படிப் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்க லாம்.

மட்டக்களப்பு, வவுனியா, தலைநகர் கொழும்பு ஆகிய இடங்களில் கருணா குழு அநேக தமிழ் வர்த்தகர்களை கப்பத்துக்காகப் பணயக் கைதிகளாகக் கடத்தியுள்ளது.

கருணா குழுவின் இக்க ல்களில் அரசு சம்பந்தம் இருப்பது பற்றி விசாரணை நடத்தப்படும் என அரசினால் மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், அத்தகைய விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருப்பதை அரசு இன்னும் வெளிப்படுத்தவேயில்லை. அதனால் இத்தகைய கடத்தல்கள் தடுப்பாரின்றித் தொடர்கின்றன.

அரசுப் படைகளுக்கு குற்றங்களினின்றும் தண்டனை விலக்களிப்பு வழங்கும் நடைமுறை நீடிப்பதே நீண்டகாலமாக குழப்பம் தரும் பிரச்சினையாகும்.

பிணக்கு மேலும் தீவிரமடைய, அரசுப் படைகள் சம்பந்தப்பட்ட துஷ்பிரயோகப் பட்டியலும் நீளுகின்றது. மோசமான வன்முறைகளுக்குக் காரணமான அரசபடையினரை அதற்காகப் பொறுப்பாக்குவதில் தனக்கு அக்கறையேயில்லை என்பதை அரசு தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றது. - என்றும் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார். (அ-சி)


## மரண அறிவித்தல்



### கனகலிங்கம் சாந்தகுமார்

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த கனகலிங்கம் சாந்தகுமார் நேற்று (06.08.2007) திங்கட்கிழமை அதிகாலை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் - மகேஸ்வரியின் அன்பு மகனும் ரூபமலர், காந்தரூபன், வளர்மதி, மதிவதனா, சுஜிதா, பிரசாந்தன் ஆகியோரும் அன்புத் தம்பியும் சுபகரன், செல்வகுமார் ஆகியோரின் மைத்துனரும் லோசனா, ஹேமலதன், தனுசியாம் ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2007) புதன்கிழமை 246/39, கடற்கரைதெரு, நீர்கொழும்பிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று நீர்கொழும்பு பொது இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுப்பிட்டி: 021 226 3358,
நீர்கொழும்பு: 0314927142,
கொழும்பு: (சகோதரன்) 0773571666.

தகவல்:
குடும்பத்தினர்.

**படிவம்**

பதிவாளர் சேவை தரம் III பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவு திகதி 03.09.20007

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

PHYSICS A/L 2009 SOUND
ஆரம்பம்: 09.08.2007
வியா. (6.30 - 7.30) a.m.
By: K. Selvan
NAVALAR JAFFNA.

VISHAKA COLLEGE PHYSICS ANSWER
★ கிடைக்கும் இடங்கள்:
* NEW SCIENCE CENTER (யாழ். நகர்)
NAVALAR (ஆனைப்பந்திச் சந்தி)
By: K. Selvan.


## மேலதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

2005ஆம் ஆண்டு இரண்டு ராடர்களை இந்தியா இலங்கைக்கு அளித்திருந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜனவரி மாதத்தில் ஒரு இராணுவ ராட்ரை அது அனுப்பியது. அதே வகையான ராடர் கடந்த ஜூன் மாதமும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.இந்திய விமானப் படையின் சார்பாக இந்த ராடர்கள் அனுப்பி வைக்கப் பட்டன எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுடில்லி பிரதேசத்தில் உள்ள ஹிண்டோன் இராணுவத் தளத்திலிருந்து இந்த இரண்டு ராடர்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. 1980களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வடமராட்சியில் முற்று கையிடப் பட்டபோது, அவரை மீட்க இந்தத் தளத்திலிருந்தே உலங்குவானூர்திகள் புறப்பட்டு தஞ்சாவூர் வழியாக இலங்கைக்குச் சென்றன.

2005ஆம் ஆண்டு இலங்கை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது இந்திய வருகையையொட்டி அதுவரை 5 ஆண்டுகளாக இந்தியா தனக்குத் தானே விதித்திருந்த தடையை உடைத்து 'இந்திரா -2' ரக ராடர்களை இலங்கைக்கு வழங்கியது. தாழப் பறக்கும் விமானங் களை அவதானிக்கக்கூடிய ராடர்களான அவற்றை 'பெல்' நிறுவனம் தயாரித்திருந்தது.

மரணத் தீங்கை ஏற்படுத்தாத வகை இராணுவத் தளபாடங்கள் என்ற வகைக் குள் இந்த ராடர்களும் அடங்குகின்றன என இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்காவின் தேவையை பாகிஸ்தானும் சீனாவும் நிறைவு செய்வதைத் தடுக்கும் வகையில் இத்தகைய ராடர்கள் வழங்கப் பட்டன என இந்தியா அறிவித் துள்ளது. இந்தியக் கடற்பரப்புக்கு அண் மித்த பகுதியில் பாகிஸ்தானும் சீனாவும் கண்காணிப்புச் சாதனங்களைப் பொருத் துவதை இந்தியா ஏற்கவில்லை; விரும்ப வில்லை. பிற நாடுகள் ராடர்கள் இலங் கைக்கு வழங்க முன்வந்திருக்கின்றன எனக் கூறப்பட்டதைத் தொடர்ந்து அந்த ராடர்களை அப்போதைய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், இலங்கைக்கு அனுப்பி வைத்தார். - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org